Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 11 (30.07.2004) வெள்ளிக்கிழமை இதழ்:301

## இடைக்கால நிர்வாக யோசனையின்படி புலிகளுடன் பேச்சினை நடத்த ஐ.தே.கவும் ஆதரவு தெரிவிப்பு!

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துமேயானால் அதற்கு தேவையான அதிகபட்ச ஒத்துழைப்பை வழுங்கத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.**

சமாதானப் பேச்சுக்களை இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பிப்பாரேயானால் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவளிக்கும்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் இடைக்கால நிர்வாக சபை யோசனையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என திடசங்கற்பம் பூண்டு செயற்படுவாராயின் ஐக்கிய தேசியக் கட்சி அவருக்கு ஆதரவளிக்கும்.

இடைக்கால நிர்வாக சபையின் மூலம் ஜனாதிபதியின் ஆட்சிக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுதரத் தயாராக இருக்கின்றது.

இதன் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பயன்படுத்தி எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதில்லை.

இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அமைப்பை அடிப்படையாக வைத்து, அரசாங்கம் பேச்சுக்களை நடத்துமானால், அரசாங்கத்தைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் பரவிய தீயால் கண்ணிவெடிகள் வெடித்தன!

(கிளாலி)

தென்மராட்சியில் கிளாலி படையினரின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு முன்பாக திடீரெனப் பரவிய தீயினால், அப்பகுதியில் படையினரால் புதைக்கப்பட்டிருந்த பெருமளவு கண்ணிவெடிகள் வெடித்து அழிவுற்றதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் இந்தத் தீ பரவியது. இந்தத் தீயினால் படையினரின் முன்னரங்க காவல் நிலைகளுக்கு முன்பாகப் புதைக்கப்பட்டிருந்த 35 மிதிவெடிகள், 120 மி.மீற்றர் மோட்டார் குண்டுகளுடன் இணைக்கப்பட்டிருந்த நான்கு பொறிவெடிகள், கிளைமோர் குண்டுகள் என்பனவே வெடித்துச் சிதறின.

இந்த விபத்துக்களால் ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி குறித்து மதிப்பிடப்படவில்லை எனவும், அந்தப் பகுதியில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

எனினும், இந்தத் தீ எவ்வாறு பரவியது என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

## பேச்சுக்களை ஆரம்பிக்க அதிகமான நெகிழ்வுப் போக்கினை புலிகள் கடைப்பிடிக்க வேண்டுமாம்!

### அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இன்னும் அதிகமான நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கிலும் - தெற்கிலும் இடம்பெறும் கொலைச் சம்பவங்களை நிறுத்துவதற்கு விடுதலைப்புலிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளில் தாமதம்; பெரும் யுத்தத்துக்கே வழிவகுக்கும்!

### ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புக்கள் தாமதமாகும் ஒவ்வொரு கணமும் யுத்தத்துக்கான வாய்ப்புக்கள் அதிகரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதற்கு தாம் தயாரென ஜனாதிபதி கூறினார். எனினும் அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இடைக்கால நிர்வாகத்தை மையமாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளை தாம் எதிர்ப்பதாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பொறுப்பில் மாற்றம்;

## யாழ்ப்பாணத்தில் நியமனம்பெற்ற பட்டதாரிகள் விபரம் வெளியானது

# அமைச்சுப் பொறுப்பில் மாற்றம்; ஜே.வி.பி - ஜனாதிபதி முறுகல்!

(கொழும்பு)

ஆளும் கட்சிகளில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர் அநுர குமார திசநாயக்கவின் அமைச்சின் கீழ் இருந்த நான்கு முக்கிய செயற்திட்டங்களை, ரஜரட்ட ஆற்றுவள முன்னேற்ற அமைச்சின் கீழ் திடீரென ஜனாதிபதி மாற்றியதன் காரணமாக, ஜனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை உருவாகியுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியின் இந்த அவசர நடவடிக்கையின் பின்னணியில் முக்கியமான அரசியல் நகர்வொன்று திட்டமிடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளில் நதிநீர்ப் பங்கீடு குறித்த விடயம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அம்சமானது வடக்கு - கிழக்கு பகுதியில் ஊடறுக்கும் நதிகளின் நீரை பங்கீடு செய்வது தொடர்பான திட்டங்களை கொண்டுள்ளது.

எனவே இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சு வார்த்தைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டதாரிகள் விபரம் வெளியானது

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தில் முதல் கட்டமாக 17 ஆயிரம் பேருக்கு நேற்று நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவர்களில் 11 ஆயிரத்து 294 பேர் பெண்கள் எனத் தெரியவருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 532 பேருக்கு நேற்று நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நியமனம் பெற்ற பட்டதாரிகளின் விபரம் வருமாறு :

எம்.பிரபா, வி.மயூரன், கே.மகாவலிராஜன், ரி.ஜெயதீபன், எஸ்.அற்புதராஜா, எம்.தவலிங்கம், கே.சுகிர்தானந்தம், வி.சபேசன், எஸ்.யோசப்யேசுராஜா, எம்.கனகராஜா, கே.சிறிவாணி, எம்.காண்டீபன், ஜே.குமரன்ரட்ணம், கே.நாகநாதன், என்.கேதீஸ்வரா, ரி.குருபரன், எஸ்.ஜீவதுளசி, எஸ்.சுபாசினி, ரி.பார்த்தீபன், எஸ்.தேவகுமார், எஸ்.வசந்தன், பி.பிறேமச்சந்திரன், எஸ்.சிவசுந்தர், எஸ். சிறிஸ்கந்தராஜா, எம்.திருநிறைச் செல்வி, எஸ்.சிவகுமார், எஸ்.ஜெயந்தன், ஏ.ரூபாகாந்தன் (02 ஆம் பக்கம் பார்க்க)

# கோதுமை இறக்குமதி வரியை அரசாங்கம் முற்றாக நீக்கியது!

கோதுமை இறக்குமதிக்கு இதுவரை விதிக்கப்பட்டிருந்த 25 சதவீத இறக்குமதி வரியை நீக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தை- ஜனாதிபதி, நிதியமைச்சர் உட்பட சகல அமைச்சரவை உறுப்பினர்களும் ஏகமனதாக அங்கீகரித்துள்ளனர்.

இதன்படி, கோதுமை மாவுக்கான இறக்குமதி வரி நீக்கப்படுகின்றது. 26 வருடங்களின் பின்னர் இறக்குமதி வரியின்றி சகல நாடுகளிலிருந்து எவ்வித கட்டுப்பாடுமின்றி கோதுமை மாவை இறக்குமதி செய்யமுடியும்.

இவ்வாறான ஒரு நிலை 1977 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் பிரீமா நிறுவனம் மட்டுமே கோதுமை மாவை இறக்குமதி செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மயக்க மருந்து கொடுத்தே

# கொட்டாவவில் கொலைகள் நடந்ததாக வெளியான செய்திக்கு பொலிஸ் மறுப்பு!

(கொழும்பு)

கொட்டாவவில் கொல்லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த எட்டுப் பேரும் மயக்கமருந்து கொடுத்த பின்னரே கொல்லப்பட்டதாக வெளியான செய்திகளை பொலிஸார் மறுத்துள்ளனர்.

கொல்லப்பட்ட கருணா குழுவுக்கு நிதி மற்றும் சமையல் பொறுப்புக்களை மேற்கொண்டு வந்த- தபோ என்பவர் மயக்க மருந்து கலந்த பாயாசத்தை வழங்கி, வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வைத்ததாகவும், இதையடுத்து பின்வாசல் வழியாக உள்நுழைந்த ஆறு பேர் கொண்ட குழுவினரே இந்த எட்டுப் பேரையும் கொலை செய்ததாகவும் கருணாவின் பெயரைப் பாவித்து பிரசாரம் செய்யும் இணையத்தளமொன்றை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.ஆனால் இந்தத் தகவல் தவறானது எனப் பொலிஸார் மறுப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR
Your friend in the skies...

# யாழ்ப்பாணத்தில் நியமனம் பெற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரி.சிவாயினி, பி.முரளீதரன், ஆர்.பார்த்தீபன், ஏ.ஆனந்தகணேசன், கே.சத்தியகுமார், ஜே.ஏ.சுபாசினி, வி.நாகேஸ்வரி, பி. வதனி, ஆர்.தனரூபன், இ.தர்சினி, கே.ஜெயக்குமார், எம்.சிவரானி, எம்.சதீஸ்குமார், எஸ்.தமயநதி, வி.கதிர்காமலிங்கம், ஏ.டில்லிராணி, எஸ்.சுபச்செல்வன், எஸ்.குமரமனோகரி, ஆர்.ராஜேஸ்கண்ணன், ஆர். சுனித்தா, ஏ.லலிதா, ரி.தீபா. கே.வனஜா, வை.பிரமிலா, எஸ்.சாமினி, கே.அம்பிகைபாகன்,

ரி.மதி அமுதன், எம்.செல்வரஞ்சினி , எம். செல்வரட்ணம், பி.ரதீஸ்வரி, கே. செல்வச்சந்திரன், என்.செந்திலி, எஸ்.பாமினி, வி.ஸ்ரீசண்முகப்பிரியா, எம்.கங்கா, எஸ்.சிவச்செல்வன், எம்.அகல்யா, கே.மோகனராசா, கே.முகுந்தராசா, எஸ்.ரூபகுமார், கே.மைதிலி, எஸ்.சர்வேஸ்வரி, எஸ்.செந்தூர்வாசன், ரி.ஸ்ரீஸ்கந்தராசா, கே.தர்சினி, ஜே.ஆன்லுமினா, எஸ்.ரங்காத ரன்

வி.பிரபாகரன், கே.சுசீலா, ரி.திருச்செந்தூரன், கே.சச்சிகாந்தன், வி.கருணாவதி, என்.விஜிதா, என்.நிறஞ்சலா, எஸ்.சத்தியநாராயணன், பி.சுபந்தினி, பி.மோகனதாஸ், பி.மரியதாஸ், எம்.ஜி.சற்குணராஜா, என்.முகுந்தன், கே.அமுதன், வி.முரளீதரன், வி.வசந்தகுமார், பி.பாலமுரளி, எஸ்.சுவீந்திரன், பி.மகிந்தன், எஸ்.சுதர்சினி, எஸ்.சிறீதரன்,

எஸ்.சிபாஸ்கரன், எஸ்.நேமிநாதன், ரி.கயலினி, வி.சிவகௌரி, பி.மிதுனா, ஜே.சுகிர்த்தன், கே.மலர்ச்செல்வி, எஸ்.விக்ரர், எஸ்.பாமின், எஸ்.வனிதகுமாரி, எ.றெஜினினோல்ட்ராஜ், எஸ்.கிரிஜா, என்.சிறிசங்கர், வி.பிரபாசினி, என். ஜெகன், எஸ்.நந்தினி, பி.நகுலன், ஜே.ராசையா, வி.வேல்முருகன், கே.ஜசீதரன், ரி.ஜெயக்குமாரி, பி.சேயோன், பி.ருத்திரதேவி, எஸ்.ஆனந்த செல் வராணி,

எஸ்.லோகனாந்தன், எல்.இலங்கராணி, வி. அகிலகலா, ரி.உமா, யு.தாரணி, கே.தாட்சாயினி, கே.செல்வலக்சுமி, ஏ.ஜெயவாணி, சி.ரத்ரி, எம்.ரவிபாலன், பி.வனிதா, கே.சுமனலி, பி.பிரபாலினி, கே.பாமா, கே.கேதீஸ்வரன், ரி.நளினி, மி.கவிதா, எஸ்.தர்ஷினி, ஆர். விஜ[illegible]தா, வை.தர்ஷா, எஸ்.ஜெகஜீவன், பி.ஜஸ்ரின் யூட், ரி.கிருஷானந்தன், பி.பாலமுருகன், பி.மதிவதனா, எம்.தயாகரன்,

எஸ்.லதீஸ்கரன், வை.சுபாஜினி, ரி.அஜுவன், எஸ். ராஜ்குமார், எம்.காண்டீபன், எஸ்.வனஜா, ஜி.அமுதினி, ஜி.லகுதாஸ், எ.றெகன் சியாஞானவதனி, எம்.சுதா, டி.மயூரன், எஸ்.பஸ்மன், கே.துஸ்யந்தன், எஸ்.நீரஜா, ஆர்.ராஜராஜன், பி.துவாரகன், எஸ்.பவானி, ஆர்.சுகிர்தா, என்.வனிதா, என். கோபாலகிருஷ்ணன், கே.தமிழரசி, பி.[illegible]ஜனி,

ரி.சிறிலேகா, கே.அகிலா, எஸ்.ஞானகுமார், ஜி.சிவவதனி, பி.ஜோதிலக்சுமி, எஸ்.சிவாஸ்கரன், ஆர்.சிவகுமார், எஸ்.தர்ஷன், ரி.சர்மிலா, வி. ஈஸ்வரி, டி.பேனாட் ரமேஸ், ரி. தயாளினி, ஜி.யுவேந்திரன், எஸ்.சுகந்தினி, எஸ்.கலைவாணி, எம்.சிவனந்தன், ஏ.கமலினி, எஸ்.சுரேஸினி, ஏ.வசந்தராணி, எஸ்.தர்ஷனி, என்.நவதாசன், எஸ்.சுபாகரன், எஸ்.செரின் மெலோனி, எ.பிரிந்தினி, எம்.தாரணி,

ரி.சுகந்தினி, இ. அகல்யா, ரி.வாசுகி, எஸ்.காந்த ரூபி, ஆர்.சாந்தினி, ஏ.சாந்த மூர்த்தி, பி.மணிவண்ணன், எஸ்.கவிநேசன், எஸ். மதிராசனி, எஸ். ரவீந்திரன், வி.அருந்தவக்குமார், கே.பத்மராணி, ரி.மகிந்தன், கே.கோணரஞ்சன், எம்.மல்லிகாதேவி,

வி.எஸ்.சிவானந்தம், என்.றஜிதா, ரி.தவநேசன், வி.வாகீசன், பி.சந்திரவதனி, கே.பகீரதி, வி. கனகேஸ்வரன், என்.சுரேஸ், எஸ்.சிவசங்கர், ஆர்.செல்வமதி, பி.உமா, எஸ்.சுகந்தினி, ரி.சித்திராங்கி, கே.சுசீலா, வி.மைதிலி, எஸ்.விஜயந்தி, பி.சுகந்தன், கே.முருகமூர்த்தி, எஸ்.கார்த்திகா, எஸ்.சித்திரா, ரி. சுகுமார், வி.சாந்தினி, ஜே.அகிலன், எஸ்.மணிமேகலை, எஸ்.நேசலிங்கம், வி.திவ்யானந்தன், எஸ்.கஸ்தூரி, கே.பரதீபன், என். நந்தகுமார், பி.புஸ்பதேவி, எஸ். சுதர்சன், ஐ.கலாரதி, என்.சலனி, எஸ்.துசீதா,

பி.உஷாயினி, எஸ்.சுபாசினி, வி.ஆனந்தராணி, கே.குகநேசன், ஆர்.நிர்மலா, எஸ்.ஜெகன், பி.கஜலக்சுமி, பி.சதாசிவசர்மா, ஆர்.வானதி, கே.கிரிதரன், இ.பத்மா, வி.சுகந்தி, பி.மாலினி, எம். செந்தில்குமார், எஸ்.தஜீதரன், ஏ.மாலினி, கே.தர்மினி, எம்.சிவகுமாரன், ரி.ஞானசசி, என்.கல்யாணி, எஸ்.விஜிதா, ரி.றஜிதா, என்.ரவிக்குார்,

ஆர்.ரட்னேஸ்வரி, என்.சத்தியரூபன், கே.அகிலன், ரி.ஜெயமாலா, எஸ்.நடேசன், ஐ. ஆர்.டி.ராஜன், டி.விஜிதயாராஜா, வி.ஜெயசங்கர், ஜி.எம்.றெஜினா, பி.சர்மிலா, ஜே.கலையரசி, என். பாலகௌரி, எஸ்.ஜெயகலா, பி.நர் மதா, எஸ்.பாமினி, ஜே.ஜெயராஜ வமிலா, வி.ரவிச்சந்திரன், பி.நடராஜா, எஸ்.ரதினா, எம்.எல்.பி.அரு ளானந்தம், ரி.துஷியந்தி, எஸ். சட்சணாமூர்த்தி,

எஸ்.பூம்புவனேஸ்வரி, ஜே.செல்லத்துரை, கே.சுபாகரன், கே.தர்மபாலன், கே.சசிகலா, ஐ.சித்திரா, வி.கல்யாணி, ரி.உமாதேவி, ரி.நிசாந்தி, ரி.தாட்சாயனி, ஆர்.சுதாஜினி, ரி.கவிதா, கே.சிவகரி, என்.உமா, கே.மகேஸ்வரன், ரி.ஜீவகுமார், ரி.கலைச்செல்வி, கே.ஜீவமலர், எம்.சிவகுமார், கே.மாசீலன், ரி.மங்களேஸ்வரன், வி.தயானநிதி,

ஜி.அனுஷா, கே.மணிவண்ணன், எஸ்.சத்தியசீலன், எஸ்.சிவரஞ்சிதன், வி.கயல்விழி, கே.பவிதா, யு.சுதாகினி, வி.விஜயரட்சகன், ரி.சுரேந்தி, பி.அனிதா, ஆர்.லோகேஸ்வரி, எம். பாலதர்சினி, வி.பாலகிரிதரன், எ.அன்ரனி றெஜினோல், பி.கமலதாஸன், ஆர்.சசிகுமார், ஜி.கீதாஞ் சலி, எஸ்.தியாகராஜா, திருமதி.எஸ்.ரதீபா, கே.உதயகுமாரன், வை.பிரபானந்தம், ஆர். கௌரி, ரி.அஜந்தினி, பி.தர்மசீலன், எஸ்.குமரேசசர்மா, என்.யோகேஸ்வரி, ஏ.ஆனந்தலக்ஷ்மி, என்.ரகுநாத், எஸ்.சிவாஜினி, என்.ஜேசுராஜா. பி.தயாபரன், கே.யசோதா, எஸ்.ஜெயவரதன், எஸ்.அ[illegible]தா, எஸ்.கேதாரகௌரி, எம்.சுனித்திரா, எம்.தாரணி, ஜே.ரி.லெஸ்லிநிஜி, டி.சி.மேரியகலிஸ்ரா, பி.வரதராஜா வி.சுனித்தா, எஸ்.சஜிதா, ஆர்.மைதிலி, எஸ்.ஞானரூபன், எஸ்.பானுரேகா, கே.வாசுகி, வி.சோபனா, சி.சசிகலா,

என்.சிவசங்கர், எம்.துஷ்யந்தன், எம்.சத்தியவாணி, எஸ்.சிவசுகந்தினி, எஸ்.சயரூபி, ஏ.சயந்தினி, என்.குணாளினி, ரி.குணவதனி, ஏ.முரளிதரன், எஸ்.சிவந்தினி, எஸ்.தமிழ்ச் செல்வி, ஜி.யாழினி, ரி.ஜெயகௌரி, வி.ஜுட்ராஜ், கே.நேதானந்தன், எல்.சிவயோகவதனி, பி.பத்மநா தன், ஏ.ராஜினி, பி.ஜெயக்குமார், எஸ்.யசோதா, ஐ.ஜெனித்தா,

வி.சத்தியமூர்த்தி, கே.உஷாநந்தி, வி.செல்வராணி, பி.தயாளினி, என்.குணநிதி, எஸ்.சிவாஜினி, என்.கிரிதரன், கே.ஜஸ் மின் ஜெபநிதி, என்.சிவரூபி, கே.கேதீஸ்வரன், வி.சுபாசினி, எம். தர்மலிங்கம், என்.சூரியராஜா, ரி. சந்திரகாந், சி.அன்ரனிஜோர்ஜ் ராஜன், என்.கண்ணதாஸன், என்.துரந்தரி, என்.தாட்சாயணி, எம்.அசோக்குமார், பி.பிரபா, டி. ரஜினி, ரி.சிவகுமார்,

எம்.சிவசற்குணம், கே.ராதிகா, எஸ்.சிவராஜ், ரி.ஜீவஜானி, எம்.விஸ்வமூர்த்தி, வி.சுதாகரன், எஸ்.கார்த்திகா, கே.அனுஷியா, என்.சிவநாதன், வி.ரதீஸ், கே.ரூபிணி, என்.சிவச்சந்திரன், எஸ்.தயாளசோதி, எம்.சதீஸ்குமார், பி.சுமித்திரா, என்.சசிகுமார், பி.சிவபாலன், எஸ்.சிவாஜினி, ஏ.மோகனமாலா, கே.கிருபானந்தி, கே.வளர்மதி, எம்.தபேந்திரன்,

ஜே.விஜயவாணி, கே.கவிதா, எஸ்.கிறேஸ்மேரி, ஏ.ரி.அமிர்தா, பி.புதியராஜா, பி.ரூபன், கே.ஜமுனா, பி.கௌசலா, எஸ்.சுஜாதா, பி.பிரதீஸ்வரன், கே.செங்கமலச்செல்வி, கே.செந்தாமரையாசினி, என்.கமலினி, எல்.சி.கொன்ராட் கொலின்ரன், ஆர்.ஜகதீஸ்வரன், எஸ்.ஜெயஈஸ்வரி, கே.கவிதா, கே.கலையரசி, ஆர்.கலாஜோதி, பி.பாரதி, ஆர்.இராசலட்சுமி, ஆர்.இராஜகோபால், எம்.சுதாதினி, வை.துஸ்யந்தினி,

## புலமைப்பரிசில் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான சிறிலங்கா நிப்பொன கல்வி கலாசார நிலைய ஜூன் மாத புலமைப்பரிசிலுக்குரிய கொடுப்பனவுகள் கடந்த புதன்கிழமையில் இருந்து வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலுள்ள யாழ்ப்பாண நிலையம் -'101 இல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்களோ அல்லது பொறுப்பாசிரியர்களோ அந்தந்தப் பகுதி கல்வி வலய/கோட்ட அலுவலகம் அல்லது யாழ்ப்பாண நிலைய இணைப்பாளரான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபரிடமிருந்து, மாணவர்களுக்குரிய வவுச்சர், கொடுப்பனவுகளை காலதாமதமின்றிப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## அரசாங்க அறிவித்தல்

### யாழ்.மாவட்ட செயலகம்

### அலுவலக உபகரணங்கள் வழங்குதலுக்கான கேள்வி

யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப படிவத்தையும், பொருட்கள் தொடர்பான விபரங்களையும், நிபந்தனைகளையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை, அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிடப்பட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "அலுவலக உபகரணங்கள் வழங்குதலுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2004.08.23 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

1. உருக்கு அலுமாரி
2. உருக்கு கோவை அலுமாரி
3. உருக்கு பதவிநிலை உத்தியோகத்தர் மேசை
4. பிளாஸ்டிக் கதிரை
5. கணனி மேசை
6. கணனி அறைக் கதிரை
7. புகைப்படப் பிரதி இயந்திரம் (Canon)
8. றோணியோ இயந்திரம் (Superfax)
9. பக்ஸ் இயந்திரம் (Canon)
10. UPS
11. Printer (Epson LQ 2180)
12. Printer (Epson LQ 300).
13. Stand Fan
14. Computer Monitor

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபரும்
மாவட்ட செயலாளரும்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-2794)

## இணைக்கப்பட்ட ஆசிரிய கல்வியியலாளர் பதவி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலம், சித்திரம், விசேடகல்வி ஆகிய பாடநெறிகளில் உள்ள இணைக்கப்பட்ட விரிவுரையாளர் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை நேரில் அல்லது ரூபா 4.50 முத்திரை ஒட்டப்பட்ட 9"X 4" அளவுடைய சுயமுகவரி எழுதப்பட்ட கடித உறையை தபாலில் "பீடாதிபதி, யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக 15.08.2004 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பீடாதிபதி, யாழ்ப்பாணம், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல்வேண்டும்.

பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(சி-2793)

## தேசிய எழுச்சிப்பேரவை கூட்டம்

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச மட்ட ஊரகப் பேராளர்களின் மாநாடு, நாளை காலை 10 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (13)

## லட்சார்த்தனை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தற்போது நடைபெற்று வரும் லட்சார்த்தனை நிகழ்வின் பூர்த்தி நிகழ்வுகள் நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அம்பாளுக்கு சங்காபிஷேகமும், சஹஸ்ரநாம அர்ச்சனையும், பூரண ஆகுதியும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை - அன்றைய தினம் மாலை அம்பாளுக்கு புஸ்பார்ச்சனை செய்யப்பட்டு இரவு அம்பாள் வீதியுலா வர இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹொக்கிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் கழங்களுக்கு இடையிலான மாவட்ட ஹொக்கிப் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும், வட்டுக்கோட்டை ஓல்கோல்ட்ஸ் அணியும் மோதவுள்ளன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்விக்கோட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்றவர்களுக் கும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற இருப்பதால்- முதலாம் இடத்தைப்பெற்றவர்களும், அவர்களைப் பயிற்றுவித்தவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (29)

## சிறுவிளம்பரம்


### இலவசம்

புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு Computer Programmer/System Analyst பதவிக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். (சி/2787)

### விற்பனைக்குண்டு

சன்னதி றோட், அச்சுவேலி விளங்கியவத்தையில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை), தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பிறேமா-ஜெகதீசர், 173, அரசடி றோட், நலலூர், யாழ்ப்பாணம். T.P.No : 0712-327972 (794)









# வடக்கு - கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்துவது அரசின் பொறுப்பு!

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கடந்தகால யுத்தம் காரணமாக முழுவதுமாகவே சிதைந்துபோயுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்து அந்தப் பிரதேசத்திலுள்ள சாதாரண பொதுமக்கள் அச்சம் மற்றும் சந்தேகம் இல்லாமல் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கந்தளாய்ப் பிரதேசத்தில் புத்தபிக்குகள் சிலரைக் கௌரவிப்பதற்கான நிகழ்வு கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தகம் பாடசாலை பௌத்த தர்மத்தைப் போதிக்கும் பாடசாலையாகும். இங்குள்ள பிள்ளைகளின் சீருடைத் துணிகளுக்காக கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாலரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டது அரசுக்கு எந்த விதமான கஷ்ரமான நிலையிருந்தாலும் தகம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு புத்த தர்மத்தைப் போதிக்க விசேட இடங்கள் இருக்கவேண்டும்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை முன்னேற்றுவதற்கு ஏற்ற காலம் தற்போது தோன்றியுள்ளது. இந்த நாட்டின் அனைத்து இனங்களும் சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் வாழக்கூடிய நாட்டைத் தோற்றுவிப்பதே அவர்களின் பணியெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# கைதியின் மனைவிக்கு 10 லட்சம் ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

நீர்கொழும்புச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சமயம், கைதி ஒருவர் உயிரிழந்மைக்காக - கைதியின் மனைவிக்கு 10 லட்சம் ரூபாவை நஷ்டஈடாகச் செலுத்துமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கைதியின் மனைவி நீர்கொழுமபு மேல்நீதிமன்றில் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், மனுதாரருக்கு 10 லட்சம் ரூபாவை அரசு அபராதமாக வழங்கவேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

சிறைச்சாலை அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் தமது சொந்தப்பணத்திலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாவைப் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

உயிர் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமையை மீறும் வகையில் இந்தச் சிறைச்சாலை அதிகாரிகள் செயற்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

டொக்ரர் சிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்றின் குழுவே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

### சமையல் காஸ் விலை உயரும்

சமையல் காஸ் விலை 70 ரூபாவால் அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது 620 ரூபாவாக விற்கப்படும் சமையல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 690 ரூபாவாக அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச்சபை இது குறித்து கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு இந்த விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## பிரதமர் பங்கேற்ற கூட்டத்தில்

# சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாக மூன்று தமிழ் இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்ற கூட்டத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகத் தெரிவித்து, மூன்று தமிழ் இளைஞர்களை இராணுவப் புலனாய்வுத் துறையினர் கைதுசெய்தனர்.

கந்தளாயில் 'புதுபுத் உபகார பூஜா' என்ற பெயரில் நடத்தப்பட்ட நிகழ்வில் பிரதமர் கலந்துகொண்ட வேளையிலேயே இந்த மூன்று தமிழ் இளைஞர்களும் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார்களெனத் தெரிவித்து, கடந்த 25 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

மூதூர் ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த தம்பிராசா கஜேந்திரன் (வயது 32), சேதுராமன் ஜெகதீபன் (வயது 28), கிளிவெட்டியைச் சேர்ந்த நந்தசேன காளிதாஸ் (வயது 21) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் இராணுவ புலனாய்வுத் துறையினரால் கந்தளாய்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் வந்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இவர்கள் கந்தளாய் நகரைச் சுற்றிப் பார்க்கவே வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

# நீண்டகால இடைவெளிக்கு பின்னர் புலிகள் - முஸ்லிம்கள் சந்திப்பு!

## அம்பாறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது

(அம்பாறை)

நண்டகால இடைவெளிக்குப் பினனர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் அம்பாறையில் இடம்பெற்றது.

தம்பிலுவிலிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பணிமனையில் இந்தச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன், அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டு பேரவைத் தலைவர் நடராஜா தர்மலிங்கம் ஆகியோரும் -

முஸ்லிம்கள் தரப்பில் அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசலகள் சம்மேளனப் பொதுச் செயலாளர் ஐ.எம்.இப்ராகீம் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மௌலவி முனாஸ், மௌலவி கரீம் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக இத்தகைய சந்திப்புக்கள் இடம்பெறாத போதிலும், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் நல்லுறவுகள் சீராகப் பேணப்பட்டு வந்துள்ளமை குறித்து சந்திப்பில் இரு தரப்பினரும் திருப்தி தெரிவித்ததுடன் -

எதிர்காலத்திலும் இன நல்லுறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அட்டமடு, செங்காமம் முதலான விவசாயக் கண்டங்களில் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கு முஸ்லிம்களுக்கு வாய்ப்பளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை முஸ்லிம்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டதாக முஸ்லிம் பிரதிநிதிகள் குழுத் தலைவர் ஐ.எம்.இப்ராகிம் தெரிவித்தார்.

மேற்கொண்டும் இத்தகைய சந்திப்புக்களைத் தொடர்ந்து நடத்துவதெனவும், எதிர்வரும் ஒகஸ்ட் 16 ஆம் திகதி அக்கரைப்பற்றிலுள்ள தமிழர் மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் இத்தகைய சந்திப்பை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. (07)

# தமிழ் இளைஞரை நாடுகடத்தும் முயற்சி இறுதிநேரத்தில் ரத்து!

## ஜேர்மனியில் சம்பவம்

ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்துவதனை எதிர்த்து ஆறு வாரங்களாக உண்ணாவிரதமிருந்து வந்த பரமேஸ்வரன் சிவபாலசுந்தரம் (வயது 23) என்ற இளைஞனை நாடு கடத்துவதற்கு சில நிமிடங்கள் முன்னதாக ஜேர்மனியில் தடுப்புக்காவலில் வைத்து வைத்தியசாலைக்கு அனுப்புமாறு பெர்லின் செனட்டர் டாக்டர் எக்காட் கோட்டிவ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஆனால், உள்துறைச் செயலரான உல்றிச் பிறீஸ் தெரிவிக்கையில் - இவரைத் தடுத்து நிறுத்தியது தற்காலிகமானதெனவும், இவர் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை முடிந்து வந்ததும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவாரெனவும் தெரிவித்தார்.

பரமேஸ்வரன் சிவபாலசுந்தரம் என்ற பெயருடைய சிவாவை ஜேர்மனியின் குடியகல்வு அதிகாரிகள் இவர் அரசியல் தஞ்சம்கோரி கொடுத்த ஆவணங்களைப் பரிசீலனை செய்யாமலேயே ஜூலை 29 ஆம் திகதி நாடுகடத்தத் தீர்மானித்திருந்தனர். இதனாலேயே இவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை அரம்பித்தார்.

சிவாவை நாடு கடத்த ஜேர்மன் அரசாங்கம் எடுத்த முடிவின் மூலம் அந்த நாடு அரசியல் தஞ்சம் கோருபவர்களை எவ்வாறு நடத்துகின்றதென்பதனை அறிய முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் சிவா இருக்கும்வேளை அரசாங்கத்தை விமர்சிக்கும் நாடகம் ஒன்றில் நடித்திருந்தார். இதனால், இவரும், இவரது நண்பர்களும் இலங்கைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விடுதலைப் புலிகள் உறுப்பினர் எனக் குற்றம்சாட்டப்பட்டனர்.

இந்த நிலையில் இவர் சிறையிலிருந்து 2002 ஆம் ஆண்டு தப்பி லண்டனுக்குச் செல்லும்வேளை ஜேர்மனுக்கும் போலந்துக்கும் இடையிலுள்ள நகரில் இறக்கிவிடப்பட்டு அங்கு அரசியல் தஞ்சம்கோரும் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட இவர், தனது அரசியல் தஞ்சம்கோரும் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்திக் கொடுத்துவிட்டு இங்கிலாந்துக்குப் பயணத்தை மேற்கொணடார்.

இங்கிலாந்து சென்ற இவர் அங்கு கைதுசெய்யப்பட்டார். அங்கும் இவர் அரசியல் புகலிடம் கோருவதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்திக் கொடுத்தார். பின்னர் இவரை அந்த நாட்டு அதிகாரிகள் புகலிடம் கோருவோரைத் தடுத்து வைக்கும் மன்செஸ்ரர் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பேர்லினுக்கு 2003 ஆம் ஆண்டு மே மாதம் அனுப்பப்பட்டார்.

ஜேர்மன் குடியகல்வு அதிகாரிகள் பெர்லின் ரீகெல் விமான நிலையத்தில் இவரின் வருகைக்காகக் காத்திருந்து, இவர் ஜேர்மனியில் புகலிடம் வழங்குமாறு கொடுத்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் இவரை நாடு கடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் இவரது விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இவர் ஜேர்மனியில் இருக்கவில்லை எனவும், அதனாலேயே இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

ஆனாலும், சிவாவிடம் போதிய சான்றுகள் இல்லாத காரணத்தால் அவரை இலங்கைக்கு அனுப்பமுடியாத நிலையில் ஜேர்மன் அதிகாரிகள் இருந்தனர். இந்த நிலையில் மீளவும் அவரைப் புகலிட தடுப்புக் காவலில் வைத்தனர்.

### யாழ்.செயலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 20 ஆம் திகதிமுதல் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்

இதுவரை நிர்வாக உத்தியோகததராகக் கடமையாற்றிய எஸ்.இராமச்சந்திரன் கடந்த 19 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுள்ளதையடுத்தே இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (24)

# தென்பகுதி கடற்பரப்பில் கப்பலில் தீ; 7 பேர் பலி!

இலங்கையின் தென்பகுதியில் சர்வதேச கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று தீப் பற்றி எரிந்த சம்பவத்தில் 7 மாலுமிகள் உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட இந்தக் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட தீ விபத்திலேயே ஏழு மாலுமிகளும் உயிரிழந்தனர். இந்தக் கப்பலில் இருந்து 7 வெளிநாட்டு மாலுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக கடற்படையினர் தெரிவித்தனர். தீப்பற்றிய கப்பலில் இருந்த ஏனைய மாலுமிகளை இந்தப்பகுதியில் சென்ற பிரித்தானியக் கப்பல் ஒன்று காப்பாற்றியது. இதில் 15 மாலுமிகள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்குள்ளான கப்பல் இழுவைப்படகு மூலம் துறைமுகத்துக்கு இழுத்துவரப்பட்டதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். (101)

# ஒழுங்கீனமான முறையிலேயே எஸ்.பி.சொத்து சேகரித்தாராம்!

## லஞ்ச ஊழல் ஆணைக்குழு கூறுகிறது

(கொழும்பு)

ஒழுங்கீனமான முறையில் சொத்துச் சேகரித்தமைக்கு எதிராக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவிற்கு எதிராக விசாரணை நடத்தப்படுகிறது என லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சொத்துக்களை அளவுக்கு அதிகமாக, ஒழுங்கீனமான முறையில் சேர்க்கும் அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பது வழக்கம். அதனைக் கட்டுப்படுத்தி விடமுடியாது.

வருமானத்திற்கும் மேலாக இரண்டுகோடி ரூபாவை அவர் சேகரித்திருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையாலும், ஹிங்குராங்தோட்டை, நுகேகொட முதலான இடங்களில் இரண்டு ஆடம்பர வீடுகளைக் கட்டியமையாலும் அவர்மீது விசாரணை நடத்தப்படவேண்டியுள்ளது.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேருக்கு எதிராக முறைப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகளை நடத்திவருகிறது.

இதனடிப்படையிலேயே எஸ்.பி. திஸநாயக்க விசாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் விடுத்த செய்திக்குறிப்பிலேயே இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை - தாய்லாந்து

# வர்த்தக உடன்படிக்கை விரைவில் கைச்சாத்து!

(கொழும்பு)

இலங்கையும், தாய்லாந்தும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றில் விரைவில் கைச்சாத்திடவுள்ளன.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் சுரக்கியா சந்திரதாயும் நேற்றுமுன்தினம் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இருதரப்பு வர்த்தகப் பரிமாற்றத் தொகையை நூறுகோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பது குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சலுகை அடிப்படையில் விமான சேவையை நடத்துவது குறித்தும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பாக மேலும் ஆராய்வதற்கு தாய்லாந்து குழுவொன்று விரைவில் இலங்கை வரும் அதேவேளை, இலங்கையில் இருந்தும் ஓருகுழு தாய்லாந்திற்கு விரைவில் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை - தென்னாபிரிக்கா இடையே முதலாவது டெஸ்ட் 4 ஆம் திகதி ஆரம்பம்





(கொழும்பு)

இலங்கைக்கும் - தென்னாபிரிக்காவுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி அடுத்தமாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தென்னாபிரிக்க அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடவிருக்கிறது. தென்னாபிரிக்க அணி தற்போது தலைநகர் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளது.

இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் இடையே இரண்டு டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தற்போது இலங்கையில் 6 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் பேட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டது.

இறுதிப்போட்டியில் இந்திய - இலங்கை அணிகள் மோதவிருக்கின்றன. எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பது நாளைமறுநாள் நடைபெறும் போட்டியில் தெரிய வரும்.

இந்தப் போட்டிகள் முடிந்தவுடன், அடுத்ததாக இலங்கை அணி தென்னாபிரிக்க அணியுடன் டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவிருக்கிறது.

முதலாவது டெஸ்ட் போட்டி - அடுத்தமாதம் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை காலியில் நடைபெறவிருக்கிறது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி- கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி மைதானத்தில் அடுத்தமாதம் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

இரண்டு டெஸ்ட் போட்டிகளும் முடிந்த பின்னர், 5 ஒருநாள் போட்டி [illegible] ஆரம்பமாகும். முதலாவது ஒருநாள் போட்டி கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்தில் அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறும். அதேபோன்று இரண்டாவது ஒருநாள் போட்டியும் கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்திலேயே நடைபெறுகிறது.

மொத்தமுள்ள 5 ஒருநாள் போட்டிகளில் மூன்றாவது ஒருநாள் போட்டி மட்டுமே பகல் - இரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது. தம்புள்ள மைதானத்தில் இந்தப் போட்டி 25 ஆம் திகதி நடைபெறும்.

அதேபோன்று 4 ஆவது ஒருநாள் போட்டியும் தம்புள்ளவில் 28 ஆம் திகதி நடைபெறும். 5 ஆவது மற்றும் கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறுகிறது.

## மெய்வல்லுநர் திறனாய்வு

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் நெடுந்தீவுப் பிரதேசத்தில் இயங்குகின்ற முன்பள்ளி சிறார்களின் மெய்வல்லுநர் திறனாய்வு - நாளை மாலை 3 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் சி.சிவநேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, இந்த வருடமே முதன்முறையாக நெடுந்தீவிலுள்ள 5 முன்பள்ளிகளுக்கிடையில் விளையாட்டுப்போட்டி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## இலங்கை அணிக்கு எதிரான மெதுவான பந்துவீச்சு; இந்தியாவுக்கு எச்சரிக்கை


(கொழும்பு)

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் செவ்வாய்க்கிழமை - இலங்கைக்கு எதிராக நடந்த பரபரப்பான ஆட்டத்தில் இந்தியா 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி மெதுவாகப் பந்துவீசியது. இதற்காக ஐ.சி.சி போட்டி நடுவர் மைக் புரொக்டர் இந்தியாவை எச்சரித்துள்ளார். ஆயினும் அபராதம் விதிக்கப்படவில்லை.

இறுதிப்போட்டியில் அதுமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்வதாக ஐ.சி.சி நடுவரிடம் இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் உறுதியளித்தார்.

# ஒலிம்பிக் போட்டிகளுக்காக ஏதென்ஸில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு!



(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் கெடுபிடிகள் ஏதென்ஸ் நகரில் தொடங்கிவிட்டன. எந்த வாகனமும், இனி சாதாரணமாக நகருக்குள் நுழையமுடியாது. விமானம்கூட பறக்கமுடியாது. மீறிப் பறந்தால் சுட்டுத் தள்ளுவதற்காக நவீன ஏவுகணைகள் தயாராகக் காத்திருக்கின்றன.

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸ் நகரில் அடுத்தமாதம் 13 முதல் 29 ஆம் திகதிவரை நடக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் எல்லா நாடுகளும் கை கோர்த்துள்ளன.

ஏதென்ஸ் நகருக்குள் நுழையும் வாகனங்கள் எதுவாக இருந்தாலும் 'ஸ்கான்' சோதனை உட்பட முழுமையாக சோதித்த பிறகே அனுமதிக்கப்படுகின்றன. பாதுகாப்புப் படை வீரர்கள் துப்பாக்கியும் கையுமாக சர்வசாதாரணமாக வீதிகளில் நடமாடுகின்றனர்.

இதெல்லாம் இருந்தாலும், இன்னும் ஒரு பயம் கிரீஸ் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் குடிகொண்டுள்ளது.

அது, அமெரிக்கா மீது நடந்த தாக்குதல் போல விமானத்தைக் கடத்திக்கொண்டு வந்து தீவிரவாதிகள் நாசம் செய்துவிடுவார்களோ என்ற பயம்தான். இதையடுத்து பல விசேட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

போட்டி நடக்கும்போது ஆளில்லா விமானங்கள், கடத்தப்பட்ட விமானங்கள் அல்லது ரிமோட் கொண்ட்ரோல் மூலம் இயங்கும் சிறிய ரக கிளைடர் விமானம் போன்றவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளது. அப்படி எந்த அசம்பாவிதமும் நடக்காமல் நடக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கிரீஸ் நாட்டு விமானப்படை அதிகாரி டி.மிரிட்ஸ் தெரிவித்தார்.

# யாழ். மாவட்டம் முதலிடம்

வடக்கு - கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்று சென்றவாரம் முதல் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றுவந்தது. இதில் முதலாம் இடத்தை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு வலைப்பந்தாட்ட அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றின. யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி முதலில் அம்பாறை மாவட்ட வலைப்பந்தாட்ட அணியுடன் மோதி வெற்றிபெற்று, அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகிய வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்ட அணியுடன் மோதி வெற்றிபெற்றது. இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட வலைப்பந்தாட்ட அணியுடன் மோதி 12:53 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ் மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி - தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று-

பிற்பகல் 3 மணிக்கு சென். சேவியர் 'ஏ' அணியை எதிர்த்து மனோகரா 'ஏ' அணி மோதும் போட்டியும்,

பிற்பகல் 4 மணிக்கு கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் கழக அணி மோதும் போட்டியும் இடம்பெறவுள்ளது. (13)

# சர்வதேச செஸ் போட்டி; அரையிறுதியில் ஆனந்த்

(டார்ட்மன்ட்)

சர்வதேச கிராண்ட் மாஸ்டர்களுக்கான செஸ் பந்தயம் ஜேர்மனியில் நடந்துவருகிறது. இந்தப் போட்டிக்கான அரையிறுதிக்கு, இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் தகுதி பெற்றுள்ளார்.

அரையிறுதியில் ஹங்கேரி வீரர் பீட்டர் லெகோவை எதிர்த்து ஆனந்த் மோதவுள்ளார். மற்றொரு அரையிறுதியில் கிராம்னிக் மற்றும் பீட்டர் ஸ்விட்லர் ஆகியோர் பலப்பரீட்சை நடத்துவர். இந்தப் போட்டிக்கான 'ஏ' பிரிவில் இடம் பிடித்த ஆனந்த் 4 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்க வைத்தார்.

நேற்று நடந்த கடைசி லீக் ஆட்டத்தில் ஸ்விட்லருக்கு எதிராக ஆனந்த் சமன் செய்தார். ஸ்விட்லர் 3.5 புள்ளிகள் எட்டினார்.

மற்றொரு பிரிவில் அனைத்து மோதல்களும் சமநிலையில் முடிந்தது. எனவே, டைபிரேக்கர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் கிராம்னிக் முதலிடத்தையும், லெகோ 2 ஆவது இடத்தையும் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறினர்.

****** இன்னும் 14 நாட்களில் ******




# பங்களாதேஷ் வீரர்களுக்கு ராகுல் ராவிட் ஆலோசனை

(கொழும்பு)




இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் ராகுல் ராவிட் பயிற்சியில் ஈடுபட்ட பங்களாதேஷ் வீரர்களுக்கு துடுப்பாட்ட நுணுக்கம் குறித்து சொல்லிக்கொடுத்தார்.

அணியில் உள்ள அனைத்து துடுப்பாட்ட வீரர்களுக்கும் அவர் 45 நிமிடநேரம் துடுப்பாட்ட நுணுக்கம் குறித்து விளக்கமளித்தார். ராவிட்டின் ஆலோசனை பயனுள்ளதாக இருந்ததாக பங்களாதேஷ் வீரர் முகமட் அஷ்ரபுல் தெரிவித்தார்.

ஆசிய கிண்ணப் போட்டியில் நேற்று நடைபெற்ற கடைசி சுப்பர் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் மோதின என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய வீரர் வி.வி.எஸ் லக்ஸ்மன்

(கொழும்பு)



இறுதிப் போட்டியில் இந்திய அணியில் பார்த்தீவ் பட்டேலுக்கு பதில் லக்ஸ்மன் ஆடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இறுதி ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு முன்பாக இந்திய நம்பிக்கை வீரர் லக்ஸ்மன் குணமடைந்து விடுவார் என்று இந்திய அணி வட்டாரங்கள் தெரிவித்தன. பயிற்சியின்போது ஏற்பட்ட காயம் காரணமாக லக்ஸ்மன் கடந்த சில ஆட்டங்களில் ஆடவில்லை.

இதனால் இந்தியாவின் துடுப்பாட்ட பலம் குறைந்துள்ளது. லக்ஸ்மனுக்குப் பதிலாக மாற்று வீரரை தேர்வு செய்ய இந்திய கிரிக்கெட் சபை மறுத்துவிட்டது.

எனவே இறுதிப்போட்டிக்கு முன்பாக லக்ஸ்மன் குணமடைந்து விடுவார் என்று பரவலாக நம்பப்படுகிறது. லக்ஸ்மனும் இந்த நம்பிக்கையில் இருக்கிறார்.

லக்ஸ்மனின் உடல் நிலை குறித்து நிபுணர் லெய்பெஸ் கூறுகையில் - கடந்த சில நாட்களாக் லக்ஸ்மனின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

இறுதிப்போட்டிக்கு முன்பாக அவர் முழு குணம் அடைந்து விடுவார் என்று நம்புகிறேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# தென்கொரிய சமாதானப் போட்டியில் யாழ்.வீரர்கள் இருவருக்கு இரண்டாமிடம்



ம.சஞ்சீவ்



சி.கமலமோகன்

மதங்களுக்கிடையிலான சர்வதேச சமாதான அமைப்பு தேசிய மட்ட 22 வயதிற்குட்பட்ட விளையாட்டுப் போட்டி ஒன்று தென்கொரியாவில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் பங்கு பற்றிய யாழ்.மாவட்ட வீரர்கள் இருவர் 2 ஆம் இடத்தைப் பெற்றனர்.

இந்தப் போட்டியில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சி.கமலமோகன் - உயரம்பாய்தலில் 2 ஆம் இடத்தையும், பாஷையூரைச் சேர்ந்த ம.சஞ்சீவன் 110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றனர்.


இந்த சர்வதேசப் போட்டியில் யாழ்.மாவட்ட வீராங்கனையான தயாளினியும் பங்குபற்றினார். இவர்களை யாழ்.பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் ரமணன் தென்கொரியாவுக்கு அழைத்துச்சென்றார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

தமிழ் தேசிய உற்பத்தி நிறுவனமாக

# உப்பு உற்பத்தி நிலையம் ஆரம்பிக்க தேசியத் தலைவரின் மதிநுட்பமே காரணம்

## திறப்பு விழாவில் கரிகாலன் உரை



தேசிய தலைவரின் மதுநுட்பம் சிங்களத் தேசியத்தை உடைத்து ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை தமிழ் தேசிய உற்பத்தி நிறுவனமாக பாரிய தொழிற்சாலையாக மாற்றி அடித்தளம் இட்டுள்ளது என, ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவன திறப்பு விழாவில கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

இந்த உப்புத் தொழிற்சாலையில் சேகரிக்கப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் சீமெந்து தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனையிறவு தொழிற்சாலைக்கு இராணுவத்தினர் பாதுகாப்பும் வழங்கினார்கள். அந்த அளவுக்கு இந்த நிறுவனம் பெரியதொரு உற்பத்தி நிறுவனமாக விளங்கியது.

இதற்கு பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு அரணுக்குள் இருந்தபோது இந்த உப்பு உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரிய முடியாது என தொழிலாளர்கள் பின்வாங்கிச் சென்றார்கள். இதனால், நிறுவனத்தின் செயற்பாடு பாதிக்கப்பட்டது. நாட்டின் தேசிய உற்பத்தி முடக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டாலும், எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தினால் ஆனையிறவு படைத்தளமும் அழிக்கப்பட்டு, பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டு, மீண்டும் தமிழ்த்தேசியம், சிங்களத் தேசியத்தை உடைத்து இந்த ஆனையிறவு உப்பள உற்பத்தியை தமிழ்த் தேசிய உற்பத்தி நிறு வனமாகத்திறந்து, மிகப் பெரிய தொழிற்சாலையாக மாற்றம் பெறுவதற்கான அடித்தளத்தை இட்டுள்ளது.

ஆனையிறவு படைத்தளம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகவுள்ளது என அனைவரும் அறிந்தும், இலங்கை இராணுவம் கூட, இந்த ஆனையிறவு படைத்தளத்தில் இருந்த இராணுவத்தினருக்கு பயிற்சிகளும் கொடுத்து, அமெரிக்க அதிகாரிகளினாலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இனிமேல் இந்த ஆனையிறவு படைத்தளத்தை எந்தக் காலத்திலும் தகர்த்து அழிக்க முடியாது என பத்திரிகைகளில் செய்தி கொடுத்திருந்தார்கள்.

அப்படியிருந்த இந்த பாரிய படைத்தளம்- எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தினால் தாக்கி அழிக்கப்பட்டது. இதனால், சர்வதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தனித்துவமான வரலாறு ஒன்று கிடைக்கப்பெற்றது.

இனிமேல் எந்தப் பயிற்சியும் இராணுவம் எடுத்தாலும், அது விடுதலைப் புலிகளின் முன் ஈடுகொடுக்காது என்பதை நிரூபித்தது இந்த ஆனையிறவுப் படைத்தளம்.

இந்த வகையில் இந்த உப்பளமும் சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்படுகின்ற வார்த்தையாக, ஆனையிறவு. என்ற சொல் விளங்குகின்றது.

இந்த ஆனையிறவிலே தமிழ்த் தேசிய உற்பத்தி நிறுவனமாக இந்த உப்பு நிறுவனம் திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த உப்பு- அயடீன் கலந்த உப்பாக தமிழ் மக்களின் பயன்பாட்டுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. உண்மையில் இந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த உற்பத்தியை ஊக்குவித்து அதனை தரமான உப்பாகப் பயன்படுத்தச் செய்ததுடன், இந்த உற்பத்திகள் மேலும் அதிகரிக்கப்பட்டு, சர்வதேச ரீதியில் வளர்வதற்கு அவர்களின் உதவிகளை எதிர்பார்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## சாரதா தேவி ஜெயந்தி விழா பேச்சுப் போட்டி

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியினரின் 150ஆவது ஜெயந்தி விழா ஆண்டை முன்னிட்டு, கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சமித்தியால் நடாத்தப்படும் மாவட்ட மட்ட பேச்சுப்போட்டிகள் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கத்தால், மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதலிடம்பெற்ற மாணவர்கள் இதில் பங்குபற்றுகின்றனர். இதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி பாடசாலை அதிபர்களை தாவடி ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம சங்கத்தினர் கேட்டுள்ளனர்.





யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நடத்திய அழகெழல் போட்டி நிகழ்ச்சியில் சிறுவர் நாடகப் போட்டில் நடுவராகப் பங்கெடுத்த குழந்தை ம. சண்முகலிங்கம் உரையாற்றுவதையும், சித்திரப் போட்டியில் பங்குப்பற்றிய மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## திருத்தவேலை முடிவுற்ற அம்புலன்ஸ் படகு ஊர்காவற்றுறை கடலில் நங்கூரமிடப்பட்டுள்ளது

(நெடுந்தீவு)

தீவுப் பகுதிக்கான அம்புலன்ஸ் படகின் உடற்கோப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய 'திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஊர்காவற்றுறைப் பகுதியில் நங்கூரமிடப்பட்ட நிலையில் விடப்பட்டுள்ளது.

இதேவேளை, போதிய பராமரிப்பின்றி, படகினுள் கடல்நீர் புகுந்தமையால் பழுதடைந்த இயந்திரம் திருத்தவேலைக்காக கழற்றப்பட்டபோதும், அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரைக்கும் படகிக்கு பொருத்தப்படாமலேயே உள்ளது.

இந்த மாதத்தின் முதற் பகுதியிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படும் என உரிய அதிகாரிகளால தெரிவிக்கப்பட்டபோதும், அதற்கான ஆயத்தப் பணிகள் முடிவுற்ற நிலையிலேயே நங்கூரமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு அவுஸ்ரேலியாவில் வசிக்கும் இருவர் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

துன்னாலையைச் சேர்ந்த கே.சிவராசா என்பவர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மெத்தைகளையும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கே.கண்ணன் என்பவர் 60 ஆயிரம் ரூபா பெறுமதியாக இன்சூலின் மருந்து வகைகள் மற்றும் குளுக்கோஸ் மீற்றர் கருவிகளையும் அன்பளிப்பு செய்துள்ளார். (17)

## முதுசம் தொடர் நிகழ்வில் ஓவிய ஆடல் நிகழ்வு

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைவட்டம் முதுசம் பத்தாவது நிகழ்வுத் தொடரில் 13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் காட்சி, 2ஆவது வாரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தத் தொடரில் சிறப்பு நிகழ்வாக இந்தமுறை "ஓவிய ஆடல்" எனும் சிறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண நுண்கலைத்துறையின் இறுதிவருட மாணவர்கள் நாளை மாலை 4மணி முதல் 5 மணி வரை கந்தர்மடத்தில் அமைந்துள்ள பிரெஞ் நட்புறவுக்கழகத்தில் இதனை வழங்கவுள்ளனர். ஆர்வலர்கள் அனைவரையும் இந்தக் காண்பிய சங்கமத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக நுண்கலை கழக கலைவட்டம் தெரிவித்துள்ளது.

## நிலக்கண்ணிகளை அகற்ற எதியோப்பியா அரசு உதவி

வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள நிலக் கண்ணிவெடிகளை அகற்ற எதியோப்பிய அரசாங்கம் உதவி வழங்க முன்வந்துள்ளது.

நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் குழுவினரை சேவையில் ஈடுபடுத்தும் நிலையங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக எதியோப்பிய நிலக்கண்ணி அகற்றும் பணியாளர்கள் டெட்வோல்ட் மென்கொசா தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

- வன்னிப் பகுதியில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் தலைவர் - வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷை கடந்த 26ஆம் திகதி சந்தித்து இவர் கலந்துரையாடினார். (தே)

## ஓசாமா-ஈரானியத் திரைப்படம்

யாழ். பல்கலைக்கழக திரைப்படவட்டத்தின் ஏற்பாட்டில், ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் 'செடிக் பர்மாக்' இன் நெறியாளகையில உருவான "ஓசாமா" எனும் ஈரானியத் திரைப்படம், ஆங்கிலத்துணைத் தலைப்புகளுடன் விடியோக் காட்சியாக காண்பிக்கப் படவுள்ளது.

அத்துடன், இணைவாக "மௌனம் பேசும்'' எனும் விபரணச் சித்திரம் ஒன்றும் காண்பிக்கப்படும்.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கவின்கலை பயிலகத்துக்கு மாடிக்கட்டடம்

(சுதுமலை)

திருமறைக் கலாமன்றத்தின் கவின்கலை பயிலகத்துக்கு புதிய மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

டேவிற் றோட்டில் மிகப் பிரமாண்டமான முறையில் கவின் கலை பயிலகத்துக்கென பிரத்தியோகமாக அமைக்கப்பட்டு வரும் இந்தக் கட்டடம் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (91)

### சாவகச்சேரி ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியை அண்டிய பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்களில், பெறுமதிமிக்க நகைகள் திருடர்களால் திருடிச்செல்லப்பட்டுள்ளது.

இதில் மட்டுவில் சோலை அம்மன் ஆலயத்திலிருந்து அம்மன் விக்கிரகம் பெயர்க்கப்பட்டு, பெறுமதி மிக்க நகைகள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. (29)

## குமுதினி பயணிகள் படகு ஓகஸ்ட் முதல் சேவையில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு, கடந்த பத்துமாத காலமாக திருத்தவேலை காரணமாக சேவையில் ஈடுபடாமல் இருந்த குமுதினிப் படகு, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் சேவையில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, மேலதிகமாக தேவைப்பட்ட செப்பு ஆணிகள் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால், மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் இயந்திரப்பாகத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள், கரையிலேற்றப்பட்ட படகு, கடலில் இறக்கப்பட்ட பின்னரே மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (113)

## பனை மரங்களை திருடியவருக்கு அபராதம் விதிப்பு

உசன் பகுதியில் பனை மரங்கள் களவு செய்தமை தொடர்பாக நபர் ஒருவரை கொடிகாமம் பொலிஸார், கடந்த திங்கட்கிழமை அன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 3 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (29)

## வறுமையால் 101 சிறுவர்கள் பாடசாலையிலிருந்து விலகல்

புத்தூர் கிராமத்தில் 101 சிறார்கள் வறுமை காரணமாக, தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் என தெரியவருகிறது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை மற்றும் இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட வறுமை காரணமாகவே இந்தச் சிறார்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

தமது கல்வியை இடைநிறுத்தியுள்ள சிறார்களுக்கு உதவ, திருப்திகரமான நடவடிக்கைகள் எதுவும் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், இந்தப் பிரதேச சிறார்களின் கல்வி, எதிர்காலம் என்பன பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)


## விளையாட்டு விழா

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபையின் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (91)




# சாதனை அரங்கில் பெண்கள்



"எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்" என்கின்ற பாரதியின் வாக்கு மெய்யாகிக்கொண்டு வருகின்றது.

பாரதி ஒரு தீர்க்கதரிசிதான்.

சாதாரணதுறைகள் முதல் விமானம் ஓட்டுநர்வரை எல்லாத்துறைகளிலும் பெண்ணினம் நுழைந்து, திறம்பட நிர்வகித்து முதன்மை பெற்று வருகின்றது. உலக அரங்கில் இன்று பெண்கள் ஈடுபடாத துறைகளே இல்லை என்பது நாம் கண்கூடாகக் காணுகின்ற உண்மை.

இலங்கையைப் பொறுத்தவரை, ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ், அடிமைப்பட்ட காலத்தில் பெண்ணினம் மேலும் அடிமைப்பட்டுக் கிடந்தது என்றே சொல்லலாம். ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய பெண்கள் மட்டுமே முன்னேற்றம் கண்டிருந்தார்கள்.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு" என்கின்ற வாக்கியம் வேதவாக்கியமாக முழங்கிய நேரம் அது. அந்த நாளில் புரட்சிக்கவி பாரதி தாம் எழுதிய ஒரு கடிதத்தில் - அப்போதைய பெண்கல்வி 0.9 சதவீதம் மட்டுமே என்று தெரிவித்திருக்கின்றார். இதனுள் கையொப்பம் மட்டும் போடுபவர்களும் அடங்கும்.

அப்போது பெண் கல்வி மறுக்கப்பட்டது. பெண்ணுக்கு எழுத்துரிமையும், பேச்சுரிமையும் மறுக்கப்பட்டது. அப்போதைய பெண்கள் சிந்திக்கவும் மறந்தனர். அது அவர்கள் தவறல்ல. சமுதாயம் அவர்களுக்குச் சொல்லித் தந்த பாடம் அது. வீட்டைவிட்டு வெளியேறுவது தவறு என்கின்ற சிந்தனையை அன்றைய தாய் தன் தாய்ப்பாலோடு மகளுக்குப் புகட்டினாள்.

சமுதாயத்தின் பெண்ணடிமைக் கருத்துக்கள், தங்கள் இரத்தத்திலேயே ஊறிய நிலையில் பெண்ணினம் என்கின்ற பயிர் வாடிய நேரத்தில்தான், பாரதியின் பெண் விடுதலைக் கருத்துக்கள் என்கின்ற புதுமழையில் பெண்ணினம் என்கின்ற தளிர்கள் துளிர்விட ஆரம்பித்தன.

பாரதி மட்டுமல்ல, புரட்சிக்கருத்துக்கள் கொண்டபலர், பெண்விடுதலைக்குக் குரல் கொடுத்தனர். மாயூரம் வேதநாயகம்பிள்ளை பெண்கள் முன்னேற்றத்துக்குக் குரல் கொடுத்தவர்களுள் ஒருவர்.

இராஜாராம், மோகன்ராம் பெண் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

இளம் விதவை மறுமணத்தை வலியுறுத்தினார் பாவேந்தர். இப்போது விதவை மறுமணம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இளவயதுத் திருமணம் ஒழிக்கப்பட்டு வருகின்றது. பலதார மணம் ஒதுக்கப்பட்டது.

அன்னிபெசன்ட் அம்மையார் பிரம்மஞானத்தின் மூலமும், நிவேதா அம்மையார் விவேகானந்தா சிந்தனை மூலமும் பெண் விடுதலைக்காகப் பாடுபட்டனர்.

அச்சப்பட்டு, நாணி உங்கள் திறமைகளை வெளிக்கொணர மறுக்காதீர்கள் பெண்களே. என்று அறிவுறுத்திய பாரதி "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும்" என்று பெண்ணினத்தை உசுப்பிவிட்டார். பட்டங்கள் ஆளுங்கள், சட்டங்கள் செய்யுங்கள் எனப் பெண்களுக்கு விழிப்பை ஏற்படுத்தினார்.

இன்று அவர் தம் கனவு நனவாகிவிட்டது. பெண் கல்வி வீதம் தற்போது உயர்ந்து விட்டது என்று சொல்லும் அளவுக்கு முன்னேறி இருக்கின்றோம்.

ஆனால், ஒன்று அடிமைப்பட்ட காலத்துக்கு முன்பு மன்னராட்சிக் காலத்தில் பெண்ணிடம் பெரும் மதிப்புடனும், பேராற்றலுடனும் வாழ்ந்தது என்பதை நூல்கள் வாயிலாக அறியலாம்.

அந்தக் காலத்தில் வேதங்கள் பல இயற்றியவர்கள் பெண்கள் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. மைத்ரேயி என்ற பெண்மணி வேதம் இயற்றியவர். சங்க காலத்தில் பெண்கல்வி சீர்பெற்று விளங்கியது. முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் வாழ்ந்து வந்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்க காலத்தில் கவிக்குயில் ஔவையாரது புகழ் இந்த உலகம் உள்ளளவும் உயர்ந்து நிற்கின்றது அல்லவா?

ஔவையார் தமது கவித்திறனால், அதிகமானை எதிர்த்து வந்த தொண்டமானிடம் தூதுவராகச் சென்று, கவி புனைந்து போர் நடக்காமல் தடுத்ததை வரலாறு நமக்குக் கூறுகின்றது.

அந்தக் காலப்பெண்கள் வீரமங்கை யராய் போர்ப் பாசறையிலும், காவல் புரியும் தொழில் ஏற்று வாழ்ந்தனர். போரிடவும் அஞ்சவில்லை அவர்கள் -நீதி நெறிகளை ஔவையார் புகட்டியதுபோல, சைவ உலகுக்கு மறுமலர்ச்சி தந்தவர் மங்கையக்கரசியார். வைணவ உலகுக்கு வாழ்வு தந்தவர் ஆண்டாள்...

இவ்வாறான பெருமை மிகு பெண்ணினச் சுடர் சங்ககாலத்தில் பிரகாசித்து, பின் அடிமைக்காலத்தில் மங்கி, இப்போது மீண்டும் பிரகாசித்து ஒளி வீசுகிறது. 1975 ஆம் ஆண்டு அகில உலகப் பெண்கள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது.

"தொட்டிலை ஆட்டும் கை தொல் உலகை ஆளும் கை" என்ற பொன்மொழி இனறு மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

அரசியற்துறையை எடுத்துக்கொண்டால், உலக அரங்கில் இன்று பெண்கள் சிறந்த அரசியல்வாதிகளாகத் திகழ்வது நாம் அறிந்ததே. ஏன் நம்நாட்டில் கூட தற்போது 11 பேர் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களாகத் திகழ்கின்றனர். அயல் நாடுகளிலும் கூட, பெண்கள் அரசியலிலும் முதன்மை பெற்று, பல்வேறு பதவிகளில் விளங்குகிறார்கள்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளைப்போல, தற்போது நம் நாட்டிலும் படைத்துறை யிலும் பெண்கள் பதவி வகிக்கின்றனர்.

விஞ்ஞானத்துறையில் அநேக சாதனை புரிந்தவர்கள் பெண்களே. அஸிமா சட்டர்ஜி என்ற இந்திய விஞ்ஞானி - இயற்கைப் பொருள் இரசாயனம் குறித்து ஆய்வு செய்தவர்.

அர்ச்சனா சர்மா திசு வளர்ப்புத்துறையியலை ஆய்வுசெய்தவர். கரோலின் ஹெர்ஷெல் ஆறுவால் நட்சத்திரங்களைக் கண்டறிந்த பெண் ஆவார்.

ஜோசலின் பெல் என்கின்ற பெண் விஞ்ஞானி, பல்ஸார் என்ற விண்வெளிப் பொருளைக் கண்டுபிடித்தவராவார்.

டாரதி றொட்கின்ஸ் படிகங்களைப் பற்றி பல முக்கிய தகவல்களைக் கண்டறிந்தார்.

ஹென்றிட்டா என்பவர் பல லட்சம் ஒளி ஆண்டுகள் தூரத்தில் சுருள்வடிவமான நெடிலாக்கள் உள்ளன எனக் கண்டறிந்தார்.

ராகெல் கார்ஸன் என்ற பெண்மணி ஆழ் கடலைப் பற்றிய அரிய ஆய்வு நூல்களை எழுதியவர்.

விண்வெளியில் பயணம் மேற்கொண்ட முதற்பெண்மணி - வலென்டினா தெரெஸ்கோவா என்ற பெயருள்ள ரஷ்ய வீராங்கனை. இவர், 1963 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி விண்வெளியில் - விண்கலத்தில் இரண்டரை மணிநேரம் 48 முறை பூமியைச் சுற்றி வந்து உலகப் புகழ்பெற்றார்.

எவரெஸ்ட் சிகரத்தில் முதலில் ஏறி, வெற்றிக்கொடி நாட்டியப்பெண்மணி பச்சேந்திரிபோல் என்பவர்.

உலக அரங்கில் பற்பல வகையில், முதலிடம் பெற்ற பெண்மணி என்ற வகையில் முன்னணி வகிப்பவர் ராணி எலிசபெத் ஆவார். இவர் தான் உலகின் முதல் பணக்காரப்பெண்.

சாதனை மகளிருக்கு வானம் கூடத் தொட்டு விடும் தூரம்தான். சுப்பசொனிக் விமான கன்கார்டின் பைலட்டாகப் பணிபுரியும் முதல் பெண் என்கின்ற பெருமை பிரிட்டனைச் சேர்ந்த பார்பரா என்பவரைச் சேரும்.

பத்திரிகைத்துறையிலும், இலக்கியத்திலும் பெண்கள் ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியது. இதைவிட விளையாட்டுத்துறையில் பெண்ணினம் வியத்தகு சாதனைகள் பல புரிந்துள்ளது.

குடும்ப பூசல்களுக்குக் காரணம் பெண்கள் தான் என்று மேம்போக்கான கருத்து நம் நாட்டில் உண்டு. ஆனால், சர்வதேச அளவில் அமைதிக்காக நோபல் பரிசு பெற்றவர்கள் ஒன்பது பேர் பெண்கள்.

பெண் என்பவள் சக்தி வடிவானவள். அந்த சக்தி உலகமெங்கும் பரந்து கிடக்கின்றது. எண்ணற்ற சாதனைகள் புரிந்து வருகின்றது.

அன்பு, அடக்கம், சகிப்புத்தன்மை, பொறுமை, விட்டுக்கொடுத்தல் வளைந்துகொடுத்தல், இரக்கம், உபகாரம், பக்தி, சேவை, தியாகம் தாய்மை போன்ற நற்குணங்களால் மிளிரும் பெண்மை பேராற்றல் மிக்கது.

பெண்மை தனது பேராற்றலை உலகுக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் இந்தவேளையில் வரதட்சணைக் கொடுமை, பெண் சிசுக்கொலை போன்ற அவலங்கள் நடைபெறுவது உலகுக்கே தலைகுனிவு அல்லவா?

பெண்ணின் ஆற்றலை மதியுங்கள்! பெண்ணின் பெருமையை உணருங்கள்! பெண்மை வெல்க!

## பெற்றோர்களுக்கு...

☆ குழந்தைகளிடம் நேர்மையாக இருங்கள். பேசுவது ஒன்றும், செயல் வேறாகவும் இருக்கும் பெற்றோர் மீது குழந்தைகளுக்கு மரியாதை ஏற்படுவதில்லை.

☆ கணவன், மனைவிக்குள் புரிந்து கொள்ளாமை இருக்கும்போது, அது குழந்தையை வெகு சுலபமாகப் பாதிக்கின்றது.

☆ பெற்ற குழந்தைகளுக்கிடையே பாகுபாடு காட்டாதீர்கள். அதிலும் பெண் குழந்தைகள் புகுந்த வீட்டுக்குப் போகின்ற பெண்தானே என்று, நினைத்து விடாதீர்கள். அவ்வாறு இருந்தாலும் அவள் உங்கள் பிள்ளை என்பதை மறந்து விடாதீர்கள்.

☆ தனிமையில் குழந்தைகளை விடாதீர்கள். நெருங்கிச் சென்று நீங்களாகவே எதையாவது பேசுங்கள். உங்களுடைய அருகாமை ஆறுதலையும், அரவணைப்பையும் தந்து அவளுக்குத் தென்பூட்டும்.

☆ எதற்கெடுத்தாலும் கண்டிக்காதீர்கள். பிள்ளைகளை சந்தேகப்படாதீர்கள். அதற்காக ஒரேயடியாக நம்பியும் விடாதீர்கள். எல்லாம் அளவோடு இருக்கட்டும்.

## சிநேகிதிக்கு ஒரு மடல்



### அன்புள்ள சிநேகிதியே!

உனது உணர்வுகளின் அடித்தளத்திலிருந்து மேற்கிளம்பும் நிஜமான கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நிஜங்களைப் புரியாத நிழல்களாக வாழும் எம்மவர்களை எண்ணிப்பார்க்க எனக்கு வெட்கமாகத்தான் இருக்கின்றது.

அது சரி தோழியே, நல்லூர் உற்சவம் ஆரம்பமாகப்போகின்றது. உங்களுக்கென்ன பொழுதுபோகும் என எழுதியிருந்தாய். ஆலயத்தினை பொழுது போக்கும் ஒரு பூங்காவினைப் போன்று கருதும் உனது கருத்துக்களை நான் அடியோடு வெறுக்கின்றேன்.

ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடம் எனப் பொருள்படும். அதே போன்றுதான், கோவில் என்பது கோ+இல், கோ - இறைவன், இல் - இருக்கும் இடம் என்பதேயாகும். ஆனால், ஒரு சிலர் ஏனோ இதைப் புரிந்துகொள்வதில்லை. என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆன்மா வயப்படும் இடம் என்றே ஆலயங்களை நினைக்கின்றார்கள் போலும்.

அதுவும் பெண்களைப் பொறுத்தவரையில் ஆலய உற்சவங்களை ஆடம்பரக் களியாட்ட நிகழ்வுகளாகவே கருதுகின்றார்கள். நான் அனைத்துப் பெண்களையும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், பெரும்பாலான பெண்கள் இந்த நிலைமையிற்தான் இருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான பெறுமதியுடைய ஆடம்பரச் சேலைகளும், கால்முதல் கழுத்துவரை தங்க நகைகளுடனும் ஆலயம் செல்வதே அந்தஸ்து என எண்ணுகின்றனர்.

ஆண்டவனைத் தொழுது கொள்வதற்கு அந்தஸ்தும், ஆடம்பரமும் தேவையில்லை. உண்மையில் இறைவனைத் தொழுது கொள்பவர்கள் இவ்வாறாக வரமாட்டார்கள். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்கின்ற பாடலடி ஒன்றை உனக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

நமது பெண்கள் இவ்வாறாக ஆடம்பரச் சேலைகளுடனும், தங்க நகைகளுடனும் ஆலயத்துக்குச் செல்வதால், எத்தனையோ பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆலயங்களில் கள்வர்கள் கைவரிசையினைக் காட்டுவதற்கு ஏன் நாம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றாவது, நமது பெண்கள் இதைப் பற்றிச் சிந்திக்கின்றார்களா?

இன்று சொந்தமாக நகை இல்லாதவர்கள்கூட, ஆலயத்துக்குச் செல்வதற்காக அடுத்த வீட்டில் இரவல் நகை வேண்டும் நிலைமை ஒன்று பெண் சமூகத்திடையே காணப்படுகின்றது.

இந்த விடயம் பின்னர் பல பிரச்சினைகளுக் காரணமாகின்றது. இத்தகைய சம்பவங்களால் எத்தனையோ குடும்பங்களுக்கிடையான உறவுகள் முறிந்துள்ளன.

நண்பியே நான் இன்னொரு விடயத்தையும் உனக்கு இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தற்போதுள்ள சூழ்நிலையில் உன்னைப்போன்று புலம் பெயர்ந்து வாழும் எம் உறவுகள், எம் மண்ணுக்கு வருவது எவ்வளவோ சந்தோஷம். ஆனால், அவர்கள் ஆலயத்தில்கூட தங்களது நவநாகரிக உடையில் அல்லவா வருகின்றார்கள். நான் எல்லோரையும் கூறவில்லை. பெரும்பாலானோர் ஜீன்சுடனும், ரீசேட்டுடனும், ஆலய தரிசனம் செய்கின்றார்கள். இது மிகவும் அருவருப்பான விடயமாகும். நீ வாழும் சூழ்நிலையில், அல்லது உவ்விடமுள்ள கோவில்களில் அது சாத்தியமாகலாம். ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் ஆலயம் என்பது புனிதமான ஒரு இடம். அதை மாசுபடுத்த எவரும் முனையக்கூடாது.

ஆலய உற்சவங்களைப் பொழுது போக்காகக் கருதக்கூடாது என, உனக்கு எடுத்துரைக்க எண்ணிப் பலவிடயங்களை எழுதிவிட்டதாக எண்ணுகின்றேன். எனவே, உனது மடல் காணும்வரை


அன்புள்ள சிநேகிதி
நீலா

பொது சன நூலகம்

# பிஞ்சுமுகத்தின் தேடல்

வாகனம் ஓடிக்கொண்டிருந்தது. நான் ஒரு யன்னல் அருகில் இருந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். ஓரே வெட்ட வெளியாக இருந்தது. கொளுத்துகின்ற வெயில் இடையே ஓரிரு மரங்கள். அந்த மரங்கள்கூட மொட்டையாகத்தான் இருந்தன. ஓடிய வாகனம் சட்டென நின்றது. எல்லோரும் பரபரப்பாக இறங்கி நடந்தார்கள். வாகனச் சாரதி என்னை இறங்கச் சொன்னார். நானும் கீழே இறங்குவதற்காக ஆயத்தம் செய்த போது, வாகனத்துள் ஏறிய இருவர் என்னை 'இறங்கவேண்டாம்' என்று கூறிவிட்டு ஏனைய பயணிகளின் பயணப்பொதிகளைத் தட்டிப் பார்த்தார்கள். என்னருகில் வந்து ஒருவர் என பெயரைக் கேட்டார். நான் 'கீதா' என்று மெதுவாகச் சொன்னேன். அவர் 'நல்ல பெயர்' என்று சொல்லிவிட்டு, இறங்கிச் சென்றுவிட்டார். நான் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் செயற்கைக் காலினால் நடந்து கொண்டிருந்தார். அந்தக் கால் என் நினைவைப் பின்னோக்கிச் செலுத்தியது.

அன்று ஒருநாள் - நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தபோது, வீட்டில் யாரையும் காணவில்லை. ஆனால், முன்கதவு மட்டும் திறந்திருந்தது எங்கள் வீட்டின் கதவு எந்தநேரமும் பூட்டியிருக்கும். அம்மாவுக்குக் கதவைப் பூட்டி வைக்க வேண்டும். இல்லாவிட்டால், சத்தம் போடுவாள். அவளுக்கு வெண்கலத் தொண்டை வாயைத் திறந்தால் போதும். மடை திறந்த வெள்ளம் போலப் பேசுவாள். எனக்கு அந்தக் குரலைக் கேட்கப் பிடிக்கும். நானும் அம்மாவைப் போலப் பேச வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இப்போ... வீட்டினுள் நுழைந்தேன். பொருட்களெல்லாம் சிதறிக்கிடந்தன. என்னுடைய அலுமாரியெல்லாம் கீழே விழுந்துகிடந்தது. அம்மாவின் அறையுள் நுழைந்தேன். அம்மா அலங்கோலமாக விழுந்துகிடந்தாள். சேலையெல்லாம் கிழிபட்டுக் கிடந்தது. அவளுடைய வலது கால் சேலைவிலகி, முழங்கால் இரத்தம் பெருகத் துவண்டுகிடந்தது. நான் ஓடிப்போய் அம்மாவை உலுப்பிப் பார்த்தேன் அவள் மயக்கமாகக் கட்டை போலக் கிடந்தாள். அம்மா! அம்மா! நான் பெருங்குரலில் சத்தமிட்டேன். அவள் எழும்பவில்லை. அறையை விட்டு நான் வெளியே வரவும், ஒரு வாகனம் எங்கள் வாசலைத் தாண்டிச் செல்வதைக் கண்டேன். நான் தெருவுக்கு ஓடி வந்தபோது ஒரு துவிச்சக்கரவண்டியில் பக்கத்து வீட்டு மாமா தூரத்தில் வருவது தெரிந்தது. நான் அவரை எதிர்கொண்டு ஓடினேன்.



அவரருகில் மூச்சிரைக்க நான் நின்றபோது, அவரும் துவிச்சக்கர வண்டியை விட்டு இறங்கினார். என்ன! .... கீதா! அவர் என்னிடம் கேட்டபோது எனக்கு அழுகை வெடிக்க ... மாமா! அம்மா... என்று விம்மினேன். அவர் என் கையைப்பற்றிக் காற்றுப் போல எங்கள் வீட்டுக்குள் நுழைந்தார். அம்மாவின் சேலையை ஒழுங்காக்கிவிட்டு அவள் மூக்கருகே கையை வைத்துப் பார்த்தார். நான் அப்போது தான் அம்மாவின் கழுத்தைப் பார்த்தேன். அது மூளியாகக் கிடந்தது. அவள் கைகளில் கிடந்த தங்கக்காப்புக்களையும் காணவில்லை. மாமா வெளியேபோனார். நான் அம்மாவின் பக்கத்தில் இருந்தேன். அம்மாவின் கைகளைத் தொட்டேன். அவள் உடல் அசைந்தது. ஆனால், கண்களைத் திறக்கவே இல்லை.

மாமா திரும்பி ஒரு வாகனத்தில் வந்தார். அம்மாவைத் தூக்கி வாகனத்தில் ஏற்றி, வைத்தியசாலைக்குக் கொண்டு போனோம். அம்மாவுக்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை நடநதது. அம்மாவின் வலது கால் - முழங்கால் வரை துண்டிக்கப்பட்டது. இரண்டு வாரம் ஆகியும் அம்மா வாய் திறந்து பேசவில்லை. எல்லோரையும் மிரண்டு பார்த்தாள். யார் தொட்டாலும் பெரிதாக அலறினாள். அவளுடைய மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். என் வயது எட்டு. அதனால் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அம்மா ஊமையாகிவிட்டது எனக்குத் தாங்கமுடியாத துன்பமாக இருந்தது. அம்மா தடி ஊன்றி மெல்ல மெல்ல நடந்தாள். நான் அவள் நடக்கும் போதெல்லாம் கிட்டப்போய் உதவ விரும்பினேன். ஆனால், அவளோ அருகில் போனால் ஊன்று கோலால் அடிகக வருவாள். ஒரு முறை மாமா அருகில் போக டங்! என்று அவர் மொட்டைத் தலையில் ஊன்று கோலால் அடித்து விட்டாள. அவள் தொல்லை பொறுக் காமல் மனநோயாளர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டாள். நான் இடம் பெயர்ந்து கொழும்பில் சித்தியுடன் போய் இருந்தேன். ஒருவருடம் ஓடிப்போய்விட்டது. என் அம்மாவை நான் போய்ப் பார்க்க விரும்பினாலும் முடியவில்லை.

போன கிழமை சித்தி, தான் யாழ்ப்பாணம் போய் இருக்கப் போவதாகச் சொன்னாள். சிதத் அம்மாவின் ஒரேயொரு தங்கை. வைத்திய விடுதியில் தாதியாக வேலை செய்கிறாள். இப்போது மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் போகிறாள். அவள் கேட்டபோது நான் மறுப்புச் சொல்லவில்லை தலையை மட்டும் ஆட்டினேன். சித்தி என்மனத்தை அறிந்து கொண்டு சொன்னாள் கீதா! அம்மாவைப் ஒருக்காப் பார்த்திட்டுப்போவம்! என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. இருவரும் அன்று மாலையே மனநோய் வைத்தியசாலைக்குப் போனோம்.

சித்தி மருத்துவத்தாதி என்றபடியால், நாங்கள் உள்ளே போவதில் தடை இருக்கவில்லை. அங்கே ஒரு மண்டபம் எல்லா நோயாளரும் ஏதேதோ செய்து கொண்டிருந்தனர். அவர்களிடையே அம்மாவை நான் தேடினேன். ஒரு மூலையில் இரண்டு ஊன்று கோல்கள் கிடந்தன. அதனருகே முக்காடு போட்டுத் தலையை மூடியபடி ஒரு உருவம் குந்தியிருந்தது. அதன் கைகளில் ஒரு இலக்கத் தகடு கட்டப்பட்டிருந்தது.

சித்தி அதனருகே போனாள். நான் கையில் வைத்திருந்த கடிதத்தில் - இருந்த இலக்கத்தையும், உருவத்தின் கையில் இருந்த இலக்கத் தகட்டையும் உத்துப் பார்த்தாள். இரண்டும் ஒன்றுதான். சித்தியின் முகம் மலர்ந்தது. உருவத்தின் முக்காட்டை விலக்கினாள். உருவம் அசைய முகம் தெரிந்தது. என்மனம் அதிர்ந்தது. மொட்டைத் தலை, குழிந்த கண்கள், ஒட்டிய கன்னம், பல்லில்லாத பொக்கைவாய்.. இதுதான் அம்மாவா! என்னால் நம்ப முடியவில்லை. சித்தியின் கண்களில் நீர் வடிய அம்மாவிடம் தோடம்பழத்தைக் கொடுத்தாள். அம்மா அதைவாங்கவில்லை. சித்தி என்னிடம் பழத்தைத் தந்து கொடுக்கும்படி சொன்னாள் எனக்குக் கொஞ்சம் பயமாகவிருந்தது.

மெல்ல அருகில் சென்று அம்மாவிடம் பழத்தை நீட்டினேன். அவள் என்னைக் குறிப்பாகப் பார்த்தாள். திடீரென.. என்னை இழுத்தாள். அவள் பிடியில் எனக்கு வலித்தது. சித்தியும் என்னை விடுவிக்க வந்தாள். அம்மா என்னை விடவில்லை. என்னை இறுகத் தன் மார்போடு அணைத்து, என் கன்னத்தில் முத்தமிட்டாள். அந்தக் கணத்தில் நான் அம்மாவை உணர்ந்தேன்! என் கைகளாலும் அவளை இறுகக் கட்டிப் பிடித்தேன். அம்மா! அம்மா! என வாய் அரற்றியது. அம்மா வாய் திறந்து கீ....தா... என்று சொல்லியபோது, ஆயிரம் பூக்கள் என் மேல் சொரிந்தனபோல இருந்தது. அந்த அம்மாவின் மனம்... என் நினைவு கலையக் கண்ணை விழித்தேன். வெளியே பார்த்தேன். மொட்டைப் பனைகள் என் அம்மாவைப் போல நின்றன. இந்தப் பனைகளிடையே நானும் சித்தியும் அம்மாவை நினைத்து வாழப்போகிறோம். பனைகளிடையே ஊன்று கோலுடன் அம்மா நிற்பது போல இருந்தது. இன்னும் ஒரு பெண் ஊன்று கோலுடன் பனைகளூடே சென்று கொண்டிருந்தாள். எங்கள் வாகனம் A-9 பாதையில் விரைவாக ஓடிக்கொண்டிருந்தது. என் மனம் அதைவிட விரைவாக அம்மாவிடம் மீண்டும் ஓடிக்கொண்டிருந்தது. ✷

மனோன்மணி சண்முகதாஸ்.

# வாழ்க்கையை வளமாக்கும் தூய்மையான அன்பு



தூய்மையான அன்பைச் செலுத்துபவர்கள், வாழ்க்கையில் வளமாக இருக்கமுடியும். வாழ்க்கையின் விதி அன்பில்தான் அடங்கியிருக்கிறது என்பது ஒரு பிரபல தத்துவ ஞானியின் விளக்கம்.

நாம் தூய்மையான அன்பைச் செலுத்தும் போது, மற்றவர்கள் வாழ்க்கையை ரசித்து வாழமுடிகிறது. எந்தவித நிபந்தனையுமின்றி மற்றவர்களை நேசிக்க வேண்டும். இப்படி நேசிப்பது, நல்ல உறவுகளை வளர்க்கும் வழியாகும்.

இயற்கையாக மற்றவர்களை நேசிப்பதால், அவர்கள் இயற்கை விதிகளைக் கடைப்பிடித்து வாழமுடிகின்றது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நேசிப்பதால், அனைவரும் சுதந்திரத்துடன் வாழ்வதுடன், நேர்மையாகவும், ஒற்றுமையுடனும் காணப்படுகிறார்கள்.

மற்றவர்களை மனித நேயத்துடன் நேசிப்பதால், நாம் மென்மையானவர்கள், எதையும் அனுமதிப்பவர்கள் என்று யாரும் எண்ணிவிடமுடியாது. தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்கவும் தயங்கக்கூடாது.

ஏதாவது ஒரு காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு அன்புடன் பழகினால், வாழ்க்கையின் விதிகளை மீறுவதாகும். மற்றவர்களும் உண்மையாக நேசிக்கமாட்டார்கள். எல்லாம் போலியாகவே இருக்கும்.

ஒருவர் தான் படித்த கல்லூரியை மிகவும் மதித்துவந்தார். அந்தக் கல்லூரியில் படித்ததால்தான் நல்ல வேலை கிடைத்தது. பதவியில் உயர முடிந்தது என்று எப்போதும் எண்ணியிருந்தார்.

அவர் மகன் அவரைப் போல்வே, அதே கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று நினைத்தார். அதைப்பற்றி அடிக்கடி அவனிடம் சொல்லிவந்தார். அவனுக்குத் தேவையான பொருட்களை, உடைகளை வாங்கிக் கொடுத்தார். அவர் அன்பு செலுத்தியபோது, அவர் படித்த கல்லூரியில் எப்படியாவது அவனைச் சேர்த்துவிடவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மேலிட்டது.

முன்பள்ளிப்படிப்பு முடிந்ததும், மகன் கல்லூரிக்குப் போகவேண்டும். ஆனால், அவன் மனம தந்தை படித்த பாடசாலையில் சேர்ந்து படிக்கவேண்டும் என்று நினைக்கவில்லை. அவர் படித்த கல்லூரியில் சேர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் தன்னிடம் அன்பைச் செலுத்தி வந்திருக்கிறார் என்று நினைத்தான். இதனால், அவன் மனதில் ஒருவகைப் புரட்சி ஏற்பட்டது. தந்தையின் விருப்பத்துக்கு மாறாக, வேறு ஒரு கல்லூரியில் சேர்ந்துவிட்டான். நிபந்தனையுடன் கூடிய அன்பு எப்போதும் தோல்வியைக் கொடுக்கும் என்பதற்கு, இது ஒரு சிறந்த உதாரணம்.

பிள்ளைகளிடம் நிபந்தனையின்றி, தூய்மையான அன்பை எப்படிச் செலுத்த வேண்டும் என்று பெற்றோர்கள் பலருக்குத் தெரிவதில்லை. பிள்ளைகளைக் கட்டுப்படுத்தவே போலியான அன்பைச் செலுத்துகிறார்கள். இதனால், குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகின்றன.

ஒருவர் தனது தொழிற்சாலையில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை அடிக்கடி சந்தித்துப்பேசி, வெற்றிகரமாக வேலைவாங்க முடியும்.

தொழிலாளர்கள் கடுமையாக உழைத்தால் அவர்களுக்கு அதிகளவு போனஸ் கிடைக்கும் என்று அன்பு வார்த்தைகளால் சொல்வார். தொழிற்சாலையில் எதிர்பார்த்த அளவுக்கு மேல் உற்பத்தி பெருகி, இலாபமும் கிடைக்கக்கூடும்.

ஆனால், அதே முதலாளி, தனது மனைவியிடம் உண்மையான அன்பைச் செலுத்தி வாழ்க்கையில் வெற்றிபெற முடியாதவராக இருக்கக்கூடும். எந்தவித எதிர்பார்ப்புமின்றி மனைவியை நேசிக்கத் தெரிந்திருக்கவேண்டும். அதேபோல், மனைவியும் கணவனை எந்தவித நிபந்தனையுமின்றி நேசிக்க வேண்டும்.

அப்போதுதான் இருவரும் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். ✦

# கற்றல் கல்லூரியில் மட்டுமல்ல சிந்திக்க தொடங்கிய காலம் முதல்



பல்கலைக்கழகங்களில் மாணவர்களிடையே குழப்பங்கள் ஏற்படுகின்றன. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள நமது இளைஞர்கள் - பல குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர், தண்டனையும் பெறுகின்றனர், குடும்ப உறுப்பினரிடையே சரியான புரிந்துணர்வில்லை. திருமணங்கள் முறிவடையும் வீதம் அதிகரிக்கின்றது. தேவையற்ற பல குற்றச்சாட்டுக்கள் இளைஞர் - யுவதிகளுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன.

இன்று உலகம் பலவிதத்திலும் முன்னேறியுள்ளது. உலகை எமது இருப்பிடத்துக்குக் கொண்டுவந்துள்ளது. அத்துடன் பல, வன்செயல்களையும், சமூக விரோதச் செயல்களையும் கூடவே கொண்டுவந்துள்ளது. அனைத்தும் இன்று காலடிக்கே வந்துள்ளது. இப்படித்தான் வாழவேண்டும் என்ற நிலையை மாற்றி, எப்படியும் வாழ்ந்தால்போதும் என்ற உணர்வு தலை தூக்க வைத்துள்ளது.

கல்வியறிவுடையோர்கூட பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபடமுற்படுகின்றனர். கல்வி என்பதற்கும், நல்ல மனிதன் நல்லவாழ்வு வாழ்பவன் என்பதற்கும் தொடர்பற்றுவிட்டது. கல்வி என்பது பரீட்சைக்கு விடையெழுதத் தெரிந்திருத்தல் என்றளவில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. மாணவர்களுக்கான கல்லூரி வாழ்வில் குறிக்கப்பட்ட பாடவிதானம் என்பதற்கப்பால், வேறு எந்தக் கருத்தையோ, வாழ்க்கை பற்றிய போதனையையோ வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (இவ்வாறான நிலைக்குக் காரணங்கள் யாவை? அவை எவ்வாறு தீர்க்கப்படலாம் என்பது தனியாகப் பார்க்கப்பட வேண்டியது) இதனால் வாழ்வு பற்றியும், வாழ்க்கை விழுமியங்கள் பற்றியும் சரியான மதிப்பீடு உரிய பருவத்தில் அவர்களிடம் உருவாக்க முடிவதில்லை.

மேலும், கற்றல் என்பது கல்லூரியில் குறிப்பிட்ட நிமிடத்தில் நிகழ்வது அல்ல, அது பிள்ளைகள் சிந்திக்கத் தொடங்கிய காலம்முதல், வாழ்க்கை முழுவதுமே தொடர்வது. அவற்றைக் காட்டுவதில் பெற்றோர், சமூகம் போன்றவற்றிடம் குறிப்பிடக்கூடிய பங்கு உண்டு. ஒரு இளைஞனின் வளர்ச்சியில் ஆசிரியர், பெற்றோர், சூழல் என்பன முக்கியமானவை. இவையாவும் சேர்ந்தே அவனது கருத்துக்களை, அபிப்பிராயங்களை வாழ்க்கை பற்றிய எண்ணங்களை உருவாக்கப்போகின்றது.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு மேற்கூறிய அனைத்தும் வழங்கப்படவேண்டும். வளர்ச்சிக் கட்டங்களில் உரிய பருவத்துக்குப் பொருத்தமான சூழலில் அவனுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் வழங்குவது அவசியம். இளைஞன் அமைதியாக இல்லை. வன்செயல்களில் ஈடுபடுகின்றான், சமூக விரோதியாகின்றான் என்றுகூறும் போது, இவற்றிலிருந்து விடுபட்டதான ஒரு நல்ல பிரஜைகளாக அவர்களை உருவாக்கத் தேவையான விழுமியங்களை அவர்களுக்கு உணர்த்தப் பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது சமூகப் பிரஜையுடைய அனைவரினதும் பொறுப்பு.

பெற்றோர் - குடும்பத்தில் அவனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையூட்டும்படி நடந்து கொள்வது அவர்களுக்குப் பொருத்தமான துறையில் அவர்களை ஈடுபடுத்துவதும், தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அவர்களை வழி நடத்துவதும் அவர்கள் கடமை. ஒரு சிறந்த கற்றற்சூழல், அவனை பொறுப்புள்ளவனாகத் தன்னில் நம்பிக்கையுடையவனாக வளரச் செய்யும்.

- வாசுகி

# இங்கிருந்து எங்கே...?






---- ந. சத்தியபாலன்

நூல்களை, சஞ்சிகைகளைத் தேடித்தேடி வாசிக்கின்ற காலமொன்றிருந்தது. நல்ல விடயமொன்று நூலொன்றிலோ சஞ்சிகையிலோ படித்ததாக யாராவது கூறினால் எப்படியாவது அதைப் பெற்றுப்படித்துப் பார்க்கும் ஆர்வம் மிகுந் தவர்கள் பரவலாக இருந்தார்கள்.

இன்றோ, நிலைமை வேறாகிவிட்டது. பொதுவாக வாசிக்கும் பழக்கமே குறைந்துவிட்டது. தொலைக்காட்சியும் வேறு வசதிகளும் வாசிப்பின் இடத்தை எடுத்துக் கொண்டுவிட்டன.

சாதாரணமக்கள் மட்டத்தை விட்டாலும், ஏனைய தரப்பினர் குறிப்பாக மாணவர்கள் - மொழியைப் பயிலும் நிலையிலுள்ள மாணவர்கள், பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இவர்களும்கூட வாசிப்பதை நாடும் பழக்கம் வெகுவாகக் குறைந்தவர்களாகவே இருப்பதை அவதானிக்கமுடிகிறது. பாடநூல்களில் உள்ளதைமட்டும் கற்பித்துவிடுகிற போக்கு, குறிப்பாக மொழிக்கல்வி விடயத்தில் போதுமாக இருக்குமென நான்கருதவில்லை.

உதாரணத்துக்கு க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கு.ப.ரா. அவர்வளின் 'சிறிது வெளிச்சம்' பற்றியோ இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் பற்றியே கற்பிக்க முற்படும்போது அதே படைப்பாளிகளின் ஏனைய படைப்புக்களோடு பரிச்சயம் கொண்டவர்களாயிருப்பது மிகஅவசியம் அல்லவோ?

மௌனிபற்றிக் கற்பிக்க முனையும்போது அவரது படைப பாற்றல், மொழிநடை பற்றிய முன்னறிவும் ஆழ்ந்த ஞானமும் தேவைப்படாதோ......?

மொழி ஆசிரியரிடத்தில் இலக்கியரசனை ஒரு தனித்தராதரமாய் இருக்கும் போதுதானே கற்பித்தல் ஆழமாகவும், சிறப்பாகவும் அமையமுடியும்.

இவ்வாறே மொழியினை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களிடத்திலும் 'வாசித்தல்' அற்றுப்போய்க்கொண்டிருக்கிறது. அதைவிட ஆங்காங்கே வாசிக்கும் இயல்பு கொண்டோரிடையிலும் தரமான நல்ல நூல்களைப் படிக்கும் தன்மை இல்லாது போய்விட்டது. அவர்களின் ரசனை ரமணிச் சந்திரனையோ, லக்ஷ்மியையோ, ராஜேஷ்குமார், சுபா போன்றோரையோதான் சார்ந்து நிற்கிறது.

இவ்வாறான போக்குகளுக்குத் தொலைக்காட்சி ரசனை - சமகாலத் திரைப்படப் போக்குகளே தூண்டல்களாய் அமைகின்றன என்பது ஒரு உண்மை. ஆனாலும், அவற்றையும் மீறி வாசிப்பதை ஒரு அவசியகாரியமாயக் கருதும் மனப்பாங்கை நாம் வளர்க்காதுவிட்டதும், வாசித்தலை வெறும் பொழுது போக்காகக் கருதப் பழகியதும் காரணமாகின்றன.

வாசிப்பதை அன்றாட கடமைகளிலொன்றாக ஆக்கிக் கொள்ள நாம் தவறிவிட்டோம். அதை ஒரு மனப்பயிற்சியாக எவரும் இன்று கொள்வதில்லை. நல்ல விடயங்களை அறிந்து கொள்வதற்கும் இலக்கியம் சார்ந்து நிகழும் மாற்றங்கள், வளர்ச்சிகள் குறித்தும், மொழிவளர்ச்சி குறித்தும் தெரிந்து வைத்துக்கொள்வதற்கும், வாசிக்கும் பழக்கம் அவசியமாகின்றது. (இதெல்லாம் தெரிந்துவைத்து என்ன பயன் என்று முனகிக்கொள்பவர்களிடம் ஒரு கேள்வி, 'பயன்' என்பதை நாம் எதை வைத்து அளவிடுகிறோம் என்பது ஒரு தனி விடயம். எதையெடுத்தாலும் ஐந்து சதத்துப் பெறுமானமும்..... எனக் கணக்குப் பார்ப்பது எம்மைப்பிடித்த இன்னொரு குறைபாடு) - இலக்கிய இன்பம் என்று ஒரு விடயம் இருக்கிறதே அதை எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது? - வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்று யாரோ சொன்னதாக ஞாபகம். அது வெறும் அலங்காரவாக்கியமாகிப் போய்விடுவது ஒரு பெரிய துரதிஷ்டம்.

# இவ்வார பலன்கள்

## 30-7-2004-05-08-2004

| | ராகு | சுக் | சனி |
|---|---|---|---|
| யுரே | 30 இ. 12.11 மகர - சந்<br>31 கா 8.15 மிது - சுக்<br>31 இ. 1.30 சிங் - செவ்<br>01 இ. 12.33 கும் - சங்<br>03 பி.இ. 3.16 மீன - சந் | | சூ செவ் |
| நெப் | | | புத குரு |
| சந் | | கேது | |

### மேடம

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குருவின் பார்வை இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில்வாய்ப்புக்கள் சிறப்பாக இருக்கும். போதிய வருமானம் கிடைக்கும். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடக்க இடமுண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். தேகசுகம் நன்றாக அமையும் விவாகப் பேச்சுக்கள் நல்ல பலனைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் ஊக்கமும். உயர்ச்சியும் உண்டு. அதிகாரிகளின் பாராட்டைப்பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று மாணவர்கள் கல்வியில் முன்னேற்றத்தையும், பாராட்டுக்களையும், பெறுவார்கள் சிலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கலாம்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம்பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு ஏழரைச்சனி பிற்பகுதி நடக்கிறது. குடும்பத்தில் இடையிடையே சிறுசச்சரவுகள் தோன்றும் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதங்கள் ஏற்படும் தேகசுகத்தைப் பேணவேண்டும் இனஜன அங்கத்தவர்களிடையே வெறுப்புக்கள் தோன்றலாம். பணவருவாய் இருந்தாலும் செலவுகள் மிதமிஞ்சிக்காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக உதவியாளர்களினால் வியாபா ரங்கள் மந்த நிலையைக் காட்டும். முயற்சிதேவை. மாணவர்கள் கல்வியில் அக்கறை குறைந்து காணப்படுவர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி நடுப்பகுதி நடக்கிறது. குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும் எனினும் தேவைக் கேற்ற பொருளாதாரம் கிடைக்கும் தூரத்து உறவினர் தொல்லைகள் உண்டாகும். திருமணப்பேச்சுக்கள் இழுபறி நிலையைக்கொடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு வசதி குறைந்த இடமாற்றங்கள் நிகழக்கூடும். பொறுமையுடன் பணியாற்றுவது பலனைத் தரும். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். விற்பனை ஸ்தம்பிதமடையும். மாணவர்கள் விளையாட்டுக்களில் கூடிய கவனம் செலுத்துவார்கள்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியல் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணும் தொழில் சிறப்பாக நடக்கும் கூடிய பணவருவாய் கட்டும். தனித்தொழில் செய்வோர் அதிக லாபம் அடைவர். தேகசுகம் சிறப்பாக இருக்கும். சகோதரர்களால் உதவி கிட்டும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வெளியூரிலிருந்து இனபந்து வருவார்கள். திருமணப்பேச்சுக்கள் நன்மையான பலனைத் தரும் உத்தியோகத்தர்களுக்கு பதவிஉயர்வு, ஊதிய உயர்வுகிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று மாணவர்கள் முன்னேற்றமடைவர். பாராட்டுக்களையும் பெறுவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசிக்காரர்களுக்கு இந்த வாரம் போராட்ட காலமாகக் காணப்படும். குடும்பத்தில் சச்சரவுகள் மலிந்து காணப்படும். சகோதரர்கள் உதவி செய்வர். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவும் அதிகரிக்கும். பணவரவு கிடைத்தாலும், செலவுகள் மிதமிஞ்சிக் காணப்படும். உத்தியோகத்தர்கள் வீண்பழி கேட்க இடமுண்டு. எனினும் தொழிலை ஊக்கமாகச் செய்யவும். வியாபாரம் மிகக்குறைந்த வருவாயையே தரும். வாடிக்கையாளரைக்கவரவேண்டும். மாணவர்கள் தேவையற்ற விடயங்களில் தலையிடுவதால் பிரச்சினைகள் தோனறலாம்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியினருக்கு குடும் பத்தில் கருத்து வேற்றுமைகள் நிகழலாம். பண வரவுகளில் தடைகள் ஏற்படலாம். தேகாரோக்கியம் பேணவேண்டும் பிரயாணங்களால் அலைச்சல் மிகும் உறவினர்களால் உதவி கிடைக்கும் திருமணப்பேச்சுக்கள் காலதாமதம் காட்டும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு மேலிடத்தால் நன்மைகள் கிடைக்கும் சகதொழிலாளர்களின் உதவி உண்டு. வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும் மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப நன்மைகிடைக்கும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்கு லாபஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால். இவர்கள் எந்த விடயத்தையும் தைரியத்துடன் செயற்படுத்தி வெற்றி காண்பார்கள் குடும்பத்திலுள்ளவர்களுக்கு சுபகாரிய அனுகூலங்கள் ஏற்படலாம். தேகசௌக்கியத்தைப் பேணிக்கொள்வது நன்று. அயலவர்களாலும் இனஜனபந்துகளாலும் உதவி உண்டு. திருமணப்பேச்சுக்களும் நிறைவு பெறும். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் தமது பணிகளை ஆற்றுவார்கள். அதிகாரிகளின் உதவி உண்டு வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். பணம் சேரும் மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு அட்டமத்துச்சனி நடப்பதால் நற்பலன்கள் குறைந்து காணும். குடும்பஸ்தர்களுக்கு நிம்மதிக்குறைவு காணும். எடுத்த கருமங்கள் நிறைவேறுவதில்தடை தாமதம் ஏற்படும். புதிய நண்பர்களால் ஏமாற்றங்கள் ஏற்படும் எவ்வளவு பணவரவு வந்தாலும் பற்றாக்குறை நிலவும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுகளும் அதிகரிக்கும். திருமணப்பேச்சுக்கள் தாமதமடையும் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் உதவி கிடைத்தாலும் உயர்ச்சி தாமதங்காணும் புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு இன்னும் காலம் கனியவில்லை. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே நடக்கும். புதிய வீடுகளைத் தவிர்த்தல் நன்று மாணவர்களுக்கு எப்படி முயன்றாலும் முன்னேற்றம் காண்பது கடினம்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியினருக்கு குடும்பநிலை சிறப்பாக அமையும், எக்கருமத்தையும் திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும். இனத்தவர்களால் நண்பர்களினால் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து பணவருவாய் கிடைக்கும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படலாம். தேகசுகம் பாதிப்படையாது. திருமணப்பேறுகள் விரைவில் கிடைக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளினால் பல நன்மைகள் கிட்டும். தொழில் உயர்ச்சி, ஊதிய உயர்வு கிடைக்கலாம். பலராலும் பாராட்டப்படுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய முதலீடுகள் செய்வதற்கும் நன்று. மாணவர்கள் பரீட்சையில் சித்தி, பாராட்டுக்கள்பெறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்தவர்களுக்கு நடுத்தரமான பலன்கள் நடக்கும் புதிதாகத் தொடங்கும் கருமங்கள் சிரமத்தின் மேல் நிறைவுபெறும். பலருடைய ஆலோசனைகளையும் கேட்பதால் தத்தளிக்க நேரிடும். குடும்பத்தில் பெரியவர்களின் வரவு திருப்தி தரும். இடமாற்றம் போன்றவற்றால் பல துன்பங்களைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும். சகதொழிலாளர்களின் உதவி உண்டு. அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு திருப்தியளிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். வியாபாரம் சம்பந்தமான பிரயாணங்களும் ஏற்படும். மாணவர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் கல்வியைத் தொடரவேண்டியிருக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியினர் குடும்பஸ்தர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். தொழில் முயற்சிகளில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். பணவருவாய் குறைவில்லாமல் கிடைக்கும். இடமாற்றங்கள் முதலியன நன்மைதரும். சகோதரர்களிடம் கருத்து வேற்றுமை தோன்றலாம். புத்திரர்களால் பணவரவும், மகிழ்ச்சியும் கிட்டும். திருமணப்பேச்சுக்கள் முடிவின்றி நீடிக்கும். உத்தியோகத்தர்களுக்கு உதவிகள் உயர்ச்சிகள் கிடைக்கும். வர்த்தகர்களுக்குவியாபாரம் சிறக்கும். பணம் சேரும் மாணவர்கள் முன்னேற்றங்காண்பர். பாராட்டுக்களும் பெறுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியினருக்கு குடும்பத்தில் சிறுசச்சரவுகள் தோன்றிமறையும். தொழில் முயற்சியால் பணம் சேரும், வெளிநாட்டு உறவுகளால் நன்மை உண்டு நண்பர்கள் உதவி, தருவார்கள். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும் திருமணப்பேச்சுக்களில் இழுபறிகாணும். உத்தியோகத்தர்கள் வேலைப் பழுவைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வர்ததகர்களுக்கு வியாபாரம் ஒரளவு நன்றாக நடக்கும். எனி னும், புதிய முதலீடுகளைப் பொறுத்துச்செய்யவும் மாணவர்கள் பரீட்சைகளில் சித்திபெறுவர். சிலருக்கு உயர்கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

நாணாமை நாடாமை நார்இன்மை யாதுஒன்றும்
பேணாமை பேதை தொழில்.

திருக்குறள்

# நமது நோக்கு

## இலங்கையின் மனித உரிமை மீறல்கள்... சந்திக்கு வந்துள்ள சங்கதிகள் !

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இலங்கையின் உள்விவகாரங்கள் மீது, குறிப்பாக இனப்பிரச்சினை, மனித உரிமை மீறல் விவகாரம் மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஆகியவை தொடர்பாக, சர்வதேச சமூகத்தினதும், உலகப் பொது அமைப்புகளினதும் பார்வை குவிமையங்கொள்ளத் தொடங்கியுள்ளதுடன், அது குறித்த அவற்றின் வெளிப்படையானதும், விமர்சிக்கும் தன்மையை கொண்டதுமான கருத்துக்களும் வெளிவரத் தொடங்கியுள்ளமையானது, அரசுக்கு பெரும் தலைவலியைக் கொடுக்கும் விடயமுமாகிவிட்டது.

இவ்வளவு காலமும் குறிப்பாக கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சியின்போது சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் ஆரம்பமானது முதல் இன்று வரையான காலப்பகுதிக்குள், இலங்கைப் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களையும் பிரச்சினைக்குரிய பகுதிகளுக்கு நேரில் வருகை தந்து பார்த்து, ஆய்வு செய்து அறியும் வாய்ப்பும் அதன் உண்மை முகங்களை தரிசித்து அதிர்ச்சியடையும் சந்தர்ப்பமும் சர்வதேச சமூகத்துக்கு கிடைத்து வந்துள்ளமையானது, யுத்த காலங்களில் இந்தப் பிரதேசங்களுக்கு எவரும் வருகைதந்து நிலைமைகளை நேரில் அறியமுடியாத சூழ்நிலை நிறுவியபோது, போர்ப் பிரதேசங்களின் அவலநிலை குறித்து எதனையும் வெளியிடாது, தணிக்கைக்குட்படுத்தப்பட்ட செய்திகளையும், பொய்யானதும் திட்டமிட்டதுமான, பிரசாரங்களையும் சர்வதேச ஊடகங்களூடாக அரசு மேற்கொண்டபோது, அவர்கள் அதனூடாக மனதில் கற்பிதம் செய்துகொண்ட கருத்தில் மற்றும் காட்சிப் படிமங்கள் முற்றாகத் தகர்ந்ததுடன், சூழலின் அரசியல் மற்றும் போர்க்கள யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பினையும் அவர்களுக்கு வழங்கியதெனலாம்.

இது ஒரு முற்றிலும் மாறுபட்ட அனுபவமாக அவர்களுக்கு இருந்தாலும், உண்மைகளை உணர்ந்து கொள்ளவும், தமது கருத்தியல் நிலைப்பாடுகளை மீளாய்வு செய்து கொள்ளவும், இலங்கை விவகாரம் தொடர்பாக புதிய நிலைப்பாடுகளை எடுத்துக் கொள்ளவும் அவர்களுக்கு இது உதவியது, தற்போது முன்னர் போர்க்கோலம் கொண்டு, பொய்யுரைத்து வந்த அரசியற் தலைமையே மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், சமாதானம் குறித்த நம்பிக்கைகள் அருகத் தொடங்கியுள்ள சூழலில் 1990 களின் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் உருவாகும் அச்சம் தோன்றியுள்ளது.

புதிய அரசு ஆட்சியை அமைத்த மூன்று மாதங்களில் அது நெருப்போடு மீண்டும் விளையாடத் தொடங்கும் நடவடிக்கைகளை மெல்லமெல்ல ஆரம்பித்து வருகிறது என்றால் அது மிகையில்லை.

போருக்கான தயார்ப்படுத்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகளை மறைமுகமாக துரிதப்படுத்திக்கொண்டே, ஆரம்பிப்பதற்கான புற மற்றும் களச் சூழலை உருவாக்கும் முனைப்புடன் அரசியல் மூலோபாயங்களையும் வகுத்துவரும் அரசு கிழக்கில் அதன் பொறியை ஏற்றிவைத்துவிட்டு கொழும்பில் அதன் வெக்கையை பிரதிபலிக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கருணா விவகாரத்தை பெரிதுபடுத்தி பயன்படுத்திவரும் அரசினதும், அதன் பாதுகாப்புப் படையினரதும் குறுகிய மனவன்மத்துடன் கூடிய செயற்பாடுகள் கிழக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் சட்டம் ஒழுங்கு நிலைமையைச் சீர்கெடவைத்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக விஸ்வரூபம் கொண்டும் வருகிறது.

இது குறித்து ஆழமான கவனத்தில் எடுத்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக்குழு இலங்கை அரசின் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இலங்கையில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாகவும், உடனடியாக ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான உப ஆணைக்குழு இது விடயத்தில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த திங்களன்று ஜெனீவாவில் ஆரம்பமான ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான 56 ஆவது அமர்வில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டம் - ஒழுங்கு நடைமுறை தொடர்பாக ஆசிய சட்டவள நிறுவனம் சமர்ப்பித்த முழுமையான அறிக்கை இலங்கை மீது கடுமையான விமர்சனங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

அரசியல் கெடுபிடிகள் - அழுத்தங்கள் - சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கு தடையாக இருப்பதனால், மனித உரிமை தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ந்தும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாகவும், சட்டம் ஒழுங்கு அமுலாக்கம் முற்றாக சீரழிந்து உள்ளதாகவும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அரசியல் மயப்படுத்தப்பட்டுவிட்ட சட்டம் ஒழுங்கு ஏற்பாடுகள் தற்போது இலங்கையில் இராணுவ மயப்படுத்தப்பட்டும் வருவதாக எதிர்காலத்தில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் கடும் ஆபத்தை எதிர்கொள்ளவேண்டிய அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கையின் மனித உரிமை மீறல் செயல்கள் - அங்கு விபரமாகப் பட்டியலிடப்பட்டு, ஆதாரப்படுத்தப்பட்டமையானது இலங்கைக்கு தலைகுனிவை ஏற்படுத்தி உள்ளது.

மேற்படி மனித உரிமைகள் மீறல் விவகாரம் சபையில் விவரிக்கப்படாது, தடுக்க இலங்கை அரசு மேற்கொண்ட இராஜதந்திர நகர்வுகள் வெற்றியளிக்கவில்லை. இந்த அமர்வில் உரையாற்றிய 'இன்ரர் பேத் இன்ரர் நஷனல' நிறுவன பிரதிநிதி 'சார்ல்ஸ் கிராவ்' சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் மிகவும் வெளிப்படையாக இருப்பதாகவும், இலங்கை அரசு அதில் குழப்பத்தை உண்டுபண்ணி வருவதாகவும் குற்றம் சாட்டியமை இலங்கைக்கு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது எனலாம்.

அரசின் நேர்மையற்ற செயற்பாடுகள் தமிழ் மக்களின் பொறுமையை அதிக அளவில் சோதித்து வருவதாகவும்... அது எல்லைமீறும் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டமையானது, அரசியல் 'சுயத்தை' சர்வதேச அமைப்புக்கள் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளமை நிரூபிப்பதாகவே உள்ளது.

'சிலரைப் பலகாலமும், பலரைச் சிலகாலமும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது' என்பதை இலங்கை அரசு புரிந்து செயற்படவேண்டியது அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பில் ஜே.வி.பி ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும்போது, முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் எனக்கோரி சிலரது பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை ஜே.வி.பியினர் ஜனாதிபதியிடம் வழங்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியினரின் இந்தச் செயற்பாடுகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளதால், அவைகுறித்து உடனடியான காரணங்களை வெளிப்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துல விராஜ் காரியவசம் கோரியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரினார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கென விசேடமாக ஒரு படிமுறையும் இல்லையென அரசசேவைகள் ஆணைக்குழு திறைசேரிக்கு அறிவித்திருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பட்டதாரிகளுக்கு தொழில் தருவதாகக் கூறினாலும், அது தொழில் வழங்குவது அல்ல. பயிற்சிகளை வழங்குவதே எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழு அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் எனக் கூறிய அவர், 1994 ஆம் ஆண்டிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்ட ஆளும் கூட்டணி அரசு வேலைவாய்ப்புக்களை வழங்குவதாகக் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும்போது ஜே.வி.பியினருக்கு ஆதரவளித்த பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார். இது உண்மையா பொய்யா என அரசு வெளிப்படுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பட்டதாரிகள் வேலைவாய்ப்பு நியமனம் எச்.என்.டி.ஏ மாணவர்கள் புறக்கணிப்பு!

யாழ். மாவட்டத்திலுள்ள உயர் தேசிய கணக்கியல் வர்த்தகப் பட்டதாரிகள் சங்கத்தினர், வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து உயர் தொழில்நுட்ப நிறுவனப்பணிப்பாளர் நாயகத்துகது முறைபாடொன்றை அனுப்பியுள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - வேலையற்ற பட்டதாரிகளை அரச துறைகளில் பொருத்தமான பணிகளுக்கு உள்வாங்கும் திட்டத்தின்கீழ் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டும் இதுவரை உயர் தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டம் பெற்றோர் எவருக்கும் சத்தியக்கூற்றுக் கடதாசிகள் அனுப்பிவைக்கப்படவில்லை.

இதன்மூலம் இந்த வேலைவாய்ப்பு விடயத்தில் நாம் புறககணிக்கப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. கடந்தகாலங்களில் எல்லாம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்போது எமக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படுவது வழக்கம். இந்தமுறை அவ்வாறாக எமக்கு நியமனங்கள் வழங்கப்படாமல் விடுவது எம்மைப் புறக்கணிக்கும் வகையிலான எமது உரிமை மறுக்கும் செயலாகும்.

எனவே எமக்குச் சரியான நல்ல முடிவை வழங்கி எமது வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவேண்டும். இல்லையேல் நாம் அகிம்சைவழிப் போராட்டங்களில் ஈடுபடவேண்டிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு யாழ். அரச அதிபர், யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு, மனிதவள முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் போன்றவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# இராணுவத்துக்கு எதிராக கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணத் தமிழ் மாணவர் ஒன்றியம் இராணுவத்தினருக்கெதிராக கையெழுத்து வேட்டையொன்றை நடத்தி வருகின்றது.

அண்மையில் பாடசாலை மாணவர்கள் விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் கலந்துகொள்ளக்கூடாதென யாழ். மாவட்ட இராணுவத்தளபதியால் வெளியிடப்பட்ட செய்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் கையெழுத்து வேட்டையை மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் ஓர் கண்டன அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் இராணுவத்தினர் முன்னர் பாடசாலை மாணவர்களை கைது செய்து படுகொலை செய்தனர்.

அப்படி இருக்கும்போது தமிழ் மாணவர்கள் மீது அக்கறையுடையவர்கள்போல் மாணவரின் தேசிய உணர்வுக்கு எதிராகச் செயற்படுவது அபத்தமான நாடகமெனத் தெரிவித்துள்ளனர்.

# உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார்.

இதன்படி கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம் முதலாம் இடத்தையும், கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வர சனசமூக நிலையம் இரண்டாம் இடத்தையும், கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இதேபோல் உணவகங்களின் சுத்தம் சம்பந்தமாக நடத்தப்பட்ட போட்டியில் - பாம்பீச் றெஸ்ரோரன்ட் முதலாம் இடத்தையும், பரணி கிறீம் ஹவுஸ் இரண்டாம் இடத்தையும், கண்ணன் லொட்ஜ் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் அடுத்தமாதத்தின் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வார நிகழ்வில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# டக்ளஸுக்கு மேலுமொரு பதவி ஜனாதிபதி சந்திரிகா வழங்கினார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மேலும் ஒரு பதவி வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி விடயமும் - விவசாய விற்பனை அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள், தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜூலை 12 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின்மூலம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி விடயம் இதுவரை எந்த அமைச்சுக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை (தே)

மொழியியல்

ஜார்ஜ் எல். ஹார்ட்

# தமிழுக்கு செம்மொழி அந்தஸ்த்தை மறுப்பதற்கு அரசியலைத் தவிர வேறு காரணம் இல்லை...!

தமிழ் ஒரு செம்மொழி என்பதை வலியுறுத்திக் கூறும் ஒரு கட்டுரையை எழுதுவேண்டியுள்ள நிலை எனக்கு விநோதமாகத் தோன்றுகிறது...

தமிழின் செம்மொழித் தகுதி பற்றி எழுதும்படி பேராசிரியர் சி.இ.மறைமலை என்னைக் கேட்டுக் கொண்டார். அவரது வேண்டுகோளை நிறைவேற்றுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் - 1975 ஆம் ஆண்டு முதல் பேராசிரியராக இருக்கிறேன்.

1970 ஆம் ஆண்டு - ஹார்வர்ட் பல்கலைக்கழத்தில் நான் பட்டம் பெற்றது சமஸ்கிருதத்தில். என் முதல் பணி - மாடிசனிலுள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியர் பதவி. தமிழ், சமஸ்கிருதம் மட்டுமல்லாமல் - லத்தீன், கிரேக்கம் போன்ற செம்மொழிகளும் எனக்குத் தெரியும். அந்த மொழி இலக்கியங்களை, மூலத்திலேயே விரிவாகப் படித்திருக்கிறேன். நவீன ஐரோப்பிய இலக்கியங்களிலும், ஒப்பீட்டு மொழியியலிலும் எனக்கு நல்ல பரிச்சியம் உண்டு.

தமிழ், மலையாளம் தவிர்ந்த பிற நவீன இந்திய மொழி இலக்கியங்களை, மொழி பெயர்ப்புகளின் மூலம் படித்திருக்கிறேன். தெலுங்கு இலக்கியம் மற்றும் அதன் பாரம்பரியம் குறித்து இப்போது வாழும் மிகப் பெரும் தெலுங்குப் புலமையாளர்களில் ஒருவரான வி.நாராயண ராவ் அவர்களுடன் மிக விரிவாகக் கலந்துரையாடியிருக்கிறேன்.

ஆகையால், தெலுங்கின் பாரம்பரியத்தையும் நன்கு அறிவேன். தெற்காசிய ஆராய்ச்சித்துறையில் நீண்ட காலமாகப் பணியாற்றிவருவதால், இந்தி மொழி இலக்கியத்தின் வளமும் நான் அறிந்ததுதான்.

மகாதேவி வர்மா, துளசி, கபீர் ஆகியோரின் எழுத்துக்களை விளக்கமாகப் படித்திருக்கிறேன்.

என் வாழ்வின் பெரும் பகுதியை - அதாவது 1963 ஆம் ஆண்டு முதல் பல வருடங்களைச் சமஸ்கிருதம் பயில்வதில் செலவழித்திருக்கிறேன்.

காளிதாசர், மகா ஆகியோரின் அனைத்துப் படைப்புகளையும்- பாரவி, ஸ்ரீ ஹர்சா ஆகியோர் எழுதியவற்றில் சில பகுதிகளையும் மூல வடிவத்திலேயே வாசித்திருக்கிறேன்.

ரிக் வேதத்தின் ஐந்தாம் பகுதி, பல உபநிஷத்துகள், மகாபாரதத்தின் பெரும் பகுதி, கதாசரித சாகரம், ஆதிசங்கரன் படைப்புகள் முதலானவற்றையும் மூலத்திலேயே படித்திருக்கிறேன்.

என் புலமையைக் காட்டிக்கொள்வதற்காக நான் இதையெல்லாம் சொல்லவில்லை. மாறாக ஓர் இலக்கியம் செவ்வியல் தகுதியுடையதா? இல்லையா என்பதை மதிப்பீடு செய்வதற்கான என் தகுதியைத் தெரிவிப்பதற்காகவே சொல்கிறேன்.

எந்த அளவுகோலின்படி பார்த்தாலும், தமிழ் - உலகிலுள்ள மகத்தான செம்மொழி இலக்கியங்களிலும், மரபுகளிலும் ஒன்று என்பதை அறுதியிட்டு இதன் மூலம் கூறுகிறேன். அதற்கான காரணங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக - தமிழ் குறிப்பிடத்தக்க தொன்மை வாய்ந்தது. தற்கால இந்திய மொழி இலக்கியங்களுக்கெல்லாம் ஓராயிரம் வருடம் முந்தையது. அதன் மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியம், தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளை வைத்து நிர்ணயிக்கும்போது, கி.மு. 200 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட பகுதிகளைக் கொண்டது.

பழந்தமிழின் மிகப் பெரும் படைப்புகளான சங்க இலக்கிய நூல்களும், பத்துப்பாட்டும் - நம் சகாப்தத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. காளிதாசனின் நூல்களுக்கு இருநூறு வருடங்கள் முற்பட்டது. இது இந்தியாவில் முதன் முதலாக எழுதப்பட்ட சமயம்சாரா இலக்கியமாகும்.

இரண்டாவதாக - இந்தியாவுக்கே உரிய, அதே சமயத்தில் சமஸ்கிருதத்தினடியாக வராத, இலக்கியப் பாரம்பரியத்தைத் தமிழ் மட்டுமே கொண்டிருக்கிறது. உண்மையில் தென்னகத்தில் சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் இலக்கியங்களிலிருந்து, தமிழ் இலக்கியம் பண்பு ரீரியாக வேறுபட்டிருக்கிறது.

தனக்கே உரிய கவிதைக் கோட்பாடுகளையும், இலக்கண மரபையும், அழகியலையும், எல்லாவற்றுக்கும் மேலாக முற்றிலும் தனித்துவம் உடைய பெரும் இலக்கியக் கருவூலத்தையும் தமிழ் பெற்றிருக்கிறது. தனித்துவமிக்க, வளமான, விரிவான அறிவு மரபையும் கொண்டுள்ளது.

மூன்றாவதாக - சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளின் பெரும் இலக்கியங்களுக்கு ஒப்ப நிற்கும் தகுதி - தமிழின் செவ்விலக்கியங்களுக்கு இருக்கிறது.

இந்த மொழியிலுள்ள படைப்புகளின் நுட்பமும், ஆழமும். (இந்தியாவின் நவீன இலக்கியத்துக்கு முந்தைய காலகட்டத்தில் அடித்தள மக்களைப் பற்றிப் பேசியவை தமிழ் இலக்கியங்கள் மட்டுமே).

உலகளாவிய தன்மையும், உலகச் செவ்விலக்கியங்கள் மற்றும் பாரம்பரியங்களில் ஒன்றாகும் தகுதியைத் தமிழுக்குத் தருகின்றன. உலகளவில் அறிவியலைப் பற்றிய பெரும் நூல்களில் ஒன்றான திருக்குறளை அனைவரும் அறிவார்கள். இது தமிழ்ச் செவ்வியல் மரபின் பலவகைப்பட்ட பல பெரும் நூல்களில் ஒன்று மட்டுமே. இப்பெரும் இலக்கியம் - ஆராயாத, தெளிவு ஏற்படுத்ததாத மனித வாழ்வின் எந்த ஒரு பகுதியும் இல்லை.

இறுதியாக - நவீன இந்தியாவின் கலை மற்றும் மரபு பற்றி அறிய தற்சார்புடைய முதன்மை ஆதாரங்களுள் தமிழ் ஒன்று. சமஸ்கிருதக் கவிதை மரபின் மீது தென்னக மரபின் செல்வாக்குப் பற்றி நான் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இதற்குச் சமமான முக்கியத்துவத்துடன் கவனிக்கப்பட வேண்டியது சங்க காலத்திலிருந்து தொடங்குகிற தமிழிலுள்ள இந்துமத நூல்களாகும்.

வேதங்களுக்கு நிகராகப் புனிதமாகக் கருதப்படுகிற, தனக்கே உரிய பல படைப்புகளைத் தமிழ் பெற்றுள்ளது. இவற்றின் கருத்துக்களைச் சமஸ்கிருதம் தவிர - தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளும், பாகவத புராணம் முதலான நூல்களும் பெற்றுக்கொண்டுள்ளன. அவை திருப்பதி போன்ற பெரிய வைணவக் கோயில்களில், வேத மந்திரங்களோடு பாராயணம் செய்யப்படுகின்றன.

நவீன இந்தோ - ஆரிய மொழிகளுக்கான ஆதாரமாக சமஸ்கிருதம் இருப்பதைப் போலவே, தற்காலத் தமிழ் மற்றும் மலையாள மொழிகளுக்கான ஆதாரமாகச் செந்தமிழ் இருக்கிறது. இந்தோ - ஆரிய மொழிகளில் மிகவும் மரபு சார்ந்த, மிகவும் குறைவான மாற்றத்துக்கு உள்ளான மொழியாகச் சமஸ்கிருதம் இருப்பதைப் போலவே, திராவிட மரபு சார்ந்ததாகத் தமிழ் இருக்கிறது.

திராவிடத்தின் இயல்பையும், வளர்ச்சியையும் புரிந்துகொள்வதற்கு மொழியியலாளர்கள் பயன்படுத்த வேண்டிய உரைகல்லாகவே தமிழ் இருக்கிறது.

தமிழ் ஏன் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முயலும்போது, அரசியல் காரணத்தை மட்டுமே என்னால் உணரமுடிகிறது.

செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டால், பிற இந்திய மொழிகளும் அதே அந்தஸ்துக்கு உரிமை எழுப்பும் என்னும் அச்சம். இது தேவையற்ற கவலை. தற்கால இந்திய மொழிகளின் செழுமை குறித்த புரிதல் எனக்கு உண்டு.

இன்று பேசப்படுகிற மிகவும் வளமான, தொன்மை வாய்ந்த, படைப்பாற்றல் மிக்க மொழிகளில் அவையும் அடங்கும். உலகிலுள்ள முக்கியமான இலக்கியங்களுடன் பேசப்படுமளவுக்குத் தற்கால இடைக்காலச் செழுமையான இலக்கியங்களை அவை கொண்டிருக்கின்றன.

எனினும், அந்த மொழிகளில் ஏதும் செம்மொழியல்ல. ஆங்கிலம் மற்றும் பிற தற்கால ஐரோப்பிய மொழிகளைப் போல, (கிரேக்க மொழியைத் தவிர) முன்பே இருந்த மரபுகளிலிருந்து தாமதமாகவும் இரண்டாயிரமாண்டில் வளர்ச்சியடைந்தவை.

கிரேக்கம் - உலகம முழுவதும் ஒத்துக்கொள்ளும் விதத்தில் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டபோது, பிரஞ்சோ, ஆங்கிலமோ செம்மொழி அந்தஸ்தைக் கோரவில்லை.

செம்மொழியாக கருதப்படுவதற்கு, ஒரு மொழி பல தகுதிகளைப் பெற்றிருகக வேண்டும். அந்த மொழி பழமை வாய்ந்ததாக, இன்னொரு பாரம்பரியத்திலிருந்து கிளைத்ததாக அல்லாமல், பெருமளவு தன்னியலாக எழுந்ததாக, தற்சார்புடையதாக இருக்கவேண்டும்.

மிகப் பெரிய அளவிலான, வளமான, தொன்மையான இலக்கியத்தைப் பெற்றிருக்க வேண்டும். இந்தியாவிலுள்ள பிற தற்கால மொழிகளைப்போல அல்லாமல், தமிழ் இவை ஒவ்வொன்றையும் நிறைவேற்றுகிறது. தமிழ் - லத்தீனைப்போல, அரபு மொழியைவிட - பழமையானது. சமஸ்கிருதத்தாலோ பிற மொழிகளாலோ எந்தத் தாக்கத்துக்கும் உள்ளாகாமல், முற்றிலும் சுதந்திரமான மரபாக எழுந்தது.

மேலும், தமிழின் பழங்கால இலக்கியம் விவரிக்க முடியாத அளவுக்கு விரிவும், வளமும் கொண்டது. தமிழ் - ஒரு செம்மொழி என்பதை வலியுறுத்திக் கூறும் ஒரு கட்டுரையை எழுத வேண்டியுள்ள நிலை எனக்கு வினோதமாகத் தோன்றுகிறது.

இந்தியா ஒரு பெரிய நாடு. இந்து மதம் உலகின் பெரும் மதங்களில் ஒன்று என்பன போன்றவற்றை நிறுவ முயல்வதை ஒத்தது தான் இதுவும். உலகின் செம்மொழிகளில் ஒன்று தமிழ் என்பது, அந்த மொழியைப்பற்றி அறிந்த எவருக்கும் ஆதாரபூர்வமாகத் தெளிவான ஒரு விடயம்.

தமிழுக்குச் செம்மொழி என்ற சிறப்பை மறுப்பது. இந்தியப் பண்பாட்டின் உயிராதாரமான பெருமையையும், வளத்தையும் மறுப்பதாகும்.

தமிழில் - ஆனந்த செல்லையா

செய்திக் கட்டுரை

மட்டுவில் சுதாகரன்

# உற்பத்தியாளனும், நுகர்வோனும் காப்பாற்றப்பட வேண்டியது அவசியம்



பணம், பொருள், சேவை இவற்றைப் பெறுவதற்கோ அல்லது வழங்குவதற்கோ முயலும்போது, செயற்படும் இடைத் தரகர்களின் தலையீட்டினால் - பொருட்களினதும், சேவைகளினதும் பெறுமதி மிக மோசமாக அதிகரிக்கின்றது.

இதனால், உற்பத்தியாளன் நன்மையடைவதாக வாதிட்டாலும், உற்பத்தியாளனைவிட தரகர்களும், வியாபாரிகளும் அதிக லாபமடைகின்றனர். அதேநேரம் நுகர்வோர் விலை அதிகரிப்பினால் பெரு நஷ்டமடைகின்றனர்.

சாதாரண அன்றாட நுகர்வுப் பொருளான மக்கறியை எடுத்துப் பார்ப்போமானால், இந்த உண்மை நன்கு புலப்படும்.

நீண்ட நாட்கள் சேற்றிலும், வெயிலிலும் - நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து, பெருமளவு பணத்தை முதலிட்டுப் பெற்ற விளை பொருட்களை விற்பதற்காக சந்தைக்கு வியாபாரி கொண்டு வருகின்றான்.

சந்தையில் இந்த விவசாயியைச் சூழும் தரகர்கள் -தமக்குக் கிடைக்கும் தரகுப் பணத்துக்காக, பொருளின் விலையை உயர்த்திவிடுவர்.

அதிக விலை கிடைக்கிறதே என மகிழ்வுடன் பொருளைக் கொடுக்கும் விவசாயி - தரகரின் தரகுப் பணத்தையும், சந்தை வாடகையையும், ஏற்றுக்கூலியையும் கொடுத்துவிட்டுப் பார்த்தால், அவனது மகிழ்ச்சியெல்லாம் தவிடுபொடியாகிவிடும். சொற்ப பணமே அவனிடம் எஞ்சியிருக்கும்.

ஆனால், தரகரோ ஒரு சதம்கூட முதலிடாமல் - விற்றவரிடமும், வாங்கியவனிடமும் தரகுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்று விடுவான்.

பெருந்தொகைப் பணத்தை முதலிட்டு, கடினமாக உழைத்து, உழவன் பெற்ற பணத்தைவிட - எள்ளளவும் பணம் செலவழியாது, வியர்வை சிந்தாது, வெறும் வாய்ப்பேச்சால் தரகர் பெறும் பணம் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும்.

இதேபோல் பொருளை வாங்கிய வியாபாரி - அதனை பழுதடைந்த பொருட்களுடன் கலந்து, தனது வாய்ச் சாதுரியத்தினால் நல்ல விலைக்கு விற்றுவிடுவான். பாதிக்கப்படுவது நுகர்வோன் மட்டுமே.

உற்பத்தியாளனான விவசாயிக்குரிய பணம் - தரகர்களுக்குரிய பணம், சந்தை வாடகைப் பணம், வியாபாரியின் இலாபப் பணம் எல்லாவற்றையும் சேர்த்து, நுகர்வோனே செலுத்த வேண்டியவனாகின்றான். இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது அரச ஊழியர்கள் என்றால் மிகையாகாது.

சாதாரண கூலித்தொழிலாளியும், பொருட்களின் விலை கூடிவிட்டது எனத் தெரிவித்து, கூலியைக் கூட்டி வாங்கிவிடுவான். ஆனால், அரச அலுவலர் - நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைத் தவிர, மேலதிகமாக எதனையும் பெறமுடியாது. குறித்த நேரத்துக்கு அலுவலகம் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தினால், வியாபாரியுடன் பேரம்பேசிப் பொருளை வாங்க நேரம் போதாமையால், சொன்ன விலைக்கே பொருளை வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் அரச உழியருக்கு மட்டுமே உண்டு.

உற்பத்திச் செலவாக ஆயிரம் ரூபா முடிந்த ஒரு மரக்கறியை, விவசாயி சந்தைக்குக் கொண்டுவந்து மூவாயிரம் ரூபாவுக்கு விற்கிறார் என வைத்துக்கொள்வோம். எனவே, இரண்டாயிரம் ரூபா அவருக்கு மொத்த லாபமாகக் கிடைக்கும்.

இதில் - தரகுக்கூலியாக 5% மும், சந்தை வாடகையாக 10% மும், ஏற்றுக்கூலியாக 5% மும், பிற செலவுகளாக 5% மும் கழித்தால், எஞ்சுவது 1250 ரூபா மட்டுமே.

இந்த 1250 ரூபாவில், முதல் 1000 ரூபாவுக்கான வட்டியும், உற்பத்திக்காக உழைத்த விவசாயியினது கூலியும் கழித்தால், எஞ்சுவது ...?. உற்பத்தி செய்பவனே பொருளை நேரடியாக விற்கும் நிலை வருமாக இருந்தால், உற்பத்தியாளனும் நன்மையடைவான். நுகர்வோனும் நன்மையடைவான். இதற்கு வழி...!

நமது அண்டைநாடான இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பல இடங்களிலும் உழவர் சந்தைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இங்கு பொருட்களை உழவர் மட்டுமே விற்கலாம். ஒவ்வொரு உழவர் குடும்பத்துக்கும் ஓர் உழவர் அடையாள அட்டை வழங்கப்படும்.

அந்த அடையாள அட்டையுடன் வந்து, சந்தை வாயிலில் நிறுவைக் கருவிகளைச் சந்தை மேற்பார்வையாளரிடம் பெற்றுக்கொண்டு, தாமே விற்பனை செய்ய முடியும். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சந்தையில் இடம் ஒதுக்கப்படும். பொருட்களுக்கான நியாய விலையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்.

எந்தவொரு இடைத் தரகர்களும் இல்லாமல், விவசாயி தனது உற்பத்திப் பொருளை விற்றுவிட்டுச் செல்வான். அவன் செலுத்தவேண்டியது - சந்தை வரி, தராசு மற்றும் படி வாடகை எனச் சிறுதொகை மட்டுமே.

ஒரு விவசாயிக்கு நேரமில்லாதுவிடின், அந்த விவசாயியினது குடும்பத்தவர்களுள் ஒருவர் -வழங்கப்பட்ட விவசாய அடையாள அட்டையுடன் வந்து விற்பனையில் ஈடுபட முடியும்.

அடையாள அட்டை இல்லாது எவரும் இங்கு வியாபாரம் செய்ய முடியாது.

இடைத் தரகர்களும் செயற்பட முடியாது. இதனால், பொருட்களின் விலை அதீத உயர்ச்சி அடையாமல், நியாய விலையில் இருப்பதால், உற்பத்தி செய்வோனும் - நுகர்வோனும் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுகின்றனர்.


இந்த நிலை இங்கும் ஏற்பட வேண்டும். உற்பத்தியாளனும், நுகர்வோனும் காப்பாற்றப்படல் வேண்டும். சம்பந்தப்பட்டோர் சிந்தித்துச் செயல் வடிவம் கொடுப்பார்களா? சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இது சமர்ப்பணம்.

(24)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

### ஈராக்கில் கடத்தப்பட்ட

# பாகிஸ்தான் நாட்டவர் இருவர் சிரச்சேதம் செய்யப்பட்டனர்



ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பாகிஸ்தானியர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு, அங்கு அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வெளிநாட்டவர்களைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று, அவர்களைப் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு பல்வேறு நிபந்தனைகளை விதிப்பதும், கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் - பணயக்கைதிகளின் தலையைத் துண்டித்துக் கொலை செய்வதும் வாடிக்கையாகிவிட்டது.

ஏற்கனவே அமெரிக்கர்கள், தென்கொரியத் தொழிலதிபர் உட்பட சிலரைத் தீவிரவாதிகள், தலை துண்டித்துக் கொலை செய்துவிட்டனர். கடந்த வாரம் ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தில் பணியாற்றி வந்த இரு பாகிஸ்தானியர்கள் திடீரென்று மாயமாக மறைந்தனர். 2 நாட்கள் கழித்து அந்தப் பாகிஸ்தானியர்களைக் கடத்தியது நாங்கள்தான் என்று - இஸ்லாமிய இராணுவம் எனும் தீவிரவாத அமைப்பு அறிவித்தது. கடத்தப்பட்ட இரண்டு பாகிஸ்தானியர்களில் ஒருவர் (பெயர் ராஜா அசாத்கான்) பொறியியலாளராகப் பணியாற்றி வந்தார். இன்னொருவர் (பெயர் சஜாத் நயீம்) சாரதியாகப் பணியாற்றி வந்தார்.

இந்த இருவரையும் விடுவிக்கத் தீவிரவாதிகள் பல்வேறு நிபந்தனைகளை விதித்தனர். பாகிஸ்தான் சிறைகளில் உள்ள கைதிகளை விடுதலை செய்யவேண்டும்; ஈராக்கில் இருந்து பாகிஸ்தானியர்கள் அனைவரும் வெளியேறவேண்டும்; இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும் என்பது உட்பட பலரது கோரிக்கைகளை அவர்கள் விதித்தனர். ஆனால் இந்தக் கோரிக்கைகளை ஏற்க பாகிஸ்தான் மறுத்துவிட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் அந்த இரு பாகிஸ்தானியரையும் கொன்றுவிட்டனர். அல்ஜசீரா தொலைக்காட்சி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானியர்கள் கொலை செய்யப்பட்டதை, வீடியோ எடுத்துத் தீவிரவாதிகள் அனுப்பி வைத்தனர். ஆனால், தலையைத் துண்டித்து அவர்கள் கொல்லப்படுவது மிகவும் கொடூரமாக இருப்பதால் அதை ஒளிபரப்பவில்லை என்றும் அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானியருடன் ஈராக் நாட்டவர் ஒருவரும் கடத்தப்பட்டார். அவரை மட்டும் தீவிரவாதிகள் விடுதலை செய்தனர். ஈராக்கில் 2 பாகிஸ்தானியர்கள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு, கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் - பாகிஸ்தான் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொல்லப்பட்ட பாகிஸ்தான் பொறியியலாளர் ராஜா அசாத் கானின் மகள் போசியா, மனைவி கவுசர் பர்வீன் ஆகியோர் கண்ணீருடன், அவரது படத்தை செய்தியாளரிடம் காண்பித்த காட்சி மிகவும் கவலையளிப்பதாக இருந்தது.

### கலைஞர்களுக்கு சாள்ஸ் விருந்து



இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் சமூக சேவைகளையும் செய்துவருகிறார். இளைஞர்கள் நலனுக்காக இவர் ஒரு அறக்கட்டளை நடத்திவருவதுடன், நலிவடைந்தவர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவிகளை அளித்து வருகிறார். இவரது அறக்கட்டளைக்கு அவ்வப்போது பிரபல கலைஞர்கள் - கலைநிகழ்ச்சிகள் நடத்தி நிதிதிரட்டி வருகிறார்கள்.

இந்தக் கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில் - சாள்ஸ், அவர்களுக்கு லண்டன் ஜேம்ஸ் அரண்மனையில் விருந்து கொடுத்தார். விருந்து நிகழ்ச்சிக்கு பிரபல பாடகி ஜமிலியாவும் வந்திருந்தார். அவரை சாள்ஸ் விழுந்து விழுந்து கவனித்தார். காதலி கமிலா பார்க்கர் இந்த நிகழ்விற்குச் செல்லவில்லை.




### ஈராக்கில் நடந்த தாக்குதலில்

# கொல்லப்பட்டோரின் தொகை நூற்றுப்பத்தாக அதிகரிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் பகுபா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்தது.

நேற்றுமுன்தினம் பாக்தாத் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தில் - ஈராக்கியப் படைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டவேளை அந்த வழியால் பயணிகளை ஏற்றிவந்த மினி பஸ்ஸில் இருந்த 21 பயணிகளும் உயிரிழந்தனர். அத்துடன் இந்தப் பகுதியிலிருந்த கடைகள், கட்டடங்கள் என்பனவும் பாரிய சேதங்களுக்குள்ளாகின.



இதேவேளை, ஈராக்கின் எதிர்காலம் குறித்து முடிவெடுப்பதற்காக தேசிய அளவில் பெரிய மாநாடு நாளை பாக்தாத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் தாக்குதல் மேலும் நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சதாமுக்கு பக்கவாதம்; மூளை நரம்பு பாதிப்பாம்

### லண்டன் பத்திரிகை தகவல்


(லண்டன்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம், லேசான பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்காவிட்டால், விசாரணைக் காலத்திலேயே அவர் இறந்து விடக்கூடும் என ஜோர்தான் நாட்டு சட்டத்தரணி தெரிவித்தார்.

சதாம் ஹுசைன், தற்போது பாக்தாத்தில் உள்ள ரகசிய இடத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சதாம் ஹுசைனுக்கு ஆதரவாக வாதாட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஜோர்தான் நாட்டு சட்டத்தரணி முகமட் அல் ரஷ்தானும் ஒருவர் ஆவார்.

சதாம் வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தின் தலைவரான சலேம் சலாபிக்கு, சட்டத்தரணி ரஷ்தான் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது -

சதாம் மீதான விசாரணை பல மாதங்கள் நடக்கக்கூடும். ஆனால் பல ஆண்டுகளாக மாறக்கூடாது. சதாமின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது அவரது மூளை நரம்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.



இதனால், அவர் லேசாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். சதாமுக்கு தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்படவேண்டும். விசாரணைக் காலத்தில் சதாம் இறந்துவிட்டால்- அமெரிக்க அதிபரும், பிரிட்டன் பிரதமரும் மகிழ்ச்சியடைவர். இவ்வாறு ஜோர்தான் சட்டத்தரணி ரஷ்தான் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தகவலை லண்டனிலிருந்து வெளிவரும் 'திமிரர்' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

### இஸ்ரேல் படையினர் தாக்குதல் 3 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு

(காஸா)

காஸாவின் இரு இடங்களில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

கான்யூனுஸ் நகருக்கு அருகிலுள்ள ஜெவிஸ் அகதிமுகாமுக்கு அருகில் - இரு இஸ்லாமிய ஆயுததாரிகள் குண்டுத் தாக்குல் நடத்துவதற்கு தயாராகிக் கொண்டிருந்த வேளையே, தாம் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இரு பலஸ்தீனர்களும், இஸ்ரேல் டாங்கிகளால் சுடப்பட்டே உயிரிழந்ததாக பலஸ்தீனப் பொதுமக்கள் தெரிவித்தனர். ஆனால் தமது டாங்கிப்படை இதில் சம்பந்தப்படவில்லையென இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

காஸாவின் மேற்கு நகரமான துல்க்ராம் பகுதியில் இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இவர் இஸ்லாமியத் தீவிரவாதியெனவும், இவரைப் படையினர் கைதுசெய்ய முயன்ற வேளை - அவர் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய போதே படையினர் அவரைச் சுட்டுக் கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

துல்க்ராம் நகர ஜிகாத் அமைப்பின் பொறுப்பாளரான சயிர் அல் அஷ்கார் (வயது 26) என்பவரே இஸ்ரேல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவரென, இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை, பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் நகரான எஸ்டிறோட் நகர் மீது றொக்கட் தாக்குல் நடத்தப்பட்டதனால் இஸ்ரேல் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த ஆறு வாரங்களுக்குள் காஸாப் பகுதியில் இஸ்ரேல் படையினர் றொக்கட் தாக்குதல் நடத்தும் இடங்களைத் தேடியழித்ததாக கூறிய பின்னர் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும்.

### முஸ்லிம் நாடுகளை இணைத்து

# இஸ்லாமிய படைப்பிரிவை உருவாக்க சவூதி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது



சகல முஸ்லிம் நாடுகளையும் இணைத்து, சர்வதேச இஸ்லாமியப் படை ஒன்றை உருவாக்கி, அதனை ஈராக்கிற்கு அனுப்பும் திட்டம் ஒன்றினை சவூதி முன்வைத்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவலுக்கும், சவூதியின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் இடையே - சவூதியின் ஜெட்டா நகரில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இந்தத் திட்டம் தொடர்பாக பல இஸ்லாமிய நாடுகள் தம்மை அணுகியுள்ளதாகவும் சவூதி தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவலுக்கும், சவூதி அதிகாரிகளுக்கும் இடையில் இஸ்லாமியப் படையொன்றை உருவாக்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதனை, சவூதி வெளிவிவகார அமைச்சர் சயூத் அல் பைஸால் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால், மேலதிக தகவல் எதனையும் இது தொடர்பாக அவர் வெளியிடவில்லை.


முஸ்லிம் நாடுகளில் இருந்து சர்வதேச படைகளை உருவாக்குவதற்கு அமெரிக்கா அனுசரணையாளராக இருக்கும் எனவும், இந்தப் படைகள் ஈராக்கின் எல்லைகளைப் பாதுகாக்காமல், அங்கு பாதுகாப்புத் தொடர்பான ஸ்திரத்தன்மையையே பேணும் எனவும், அமெரிக்க இராஜாங்கச் செயலகத்தின் பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் படைப் பிரிவை உருவாக்குவதே எமது இலக்கு. நாம் இதற்கு ஆதரவு தெரிவிக்கின்றோம். இது தொடர்பாக நாம் கலந்துரையாடிவருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

சவூதி கடந்த இரண்டு வாரங்களாக இந்தத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும், ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இஸ்லாமிய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் திட்டம் தொடர்பாக ஐ.நா. மற்றும் ஈராக் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும், இது தொடர்பாக மேலதிகமாக கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் படையை ஆரம்பிப்பதில் - இஸ்லாமிய நாடுகளிடமிருந்து ஆதரவைப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளதாகவும், பெருமளவு இஸ்லாமிய நாடுகள் - ஈராக்கில், அமெரிக்கா தலைமையில் இடம்பெற்றுவரும் நடவடிக்கைகளை எதிர்த்து வருவதாகப் பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.



**கரப்பான் பூச்சிகளுக்கான ஓட்டப்பந்தயம்தான் இது. கரப்பான்பூச்சிகளின் இறகுகளைநீக்கி விட்டு அவைகளை ஓடவிடுகிறார்கள். இந்தக் கரப்பான் பூச்சிகளை ஒரு வித வீடியோ மூலமும் காட்டுகிறார்கள்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணைகள் ஒத்திவைப்பு

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காணாமற்போன ஆறுபேர்தொடர்பாக யாழ்.மேல்நீதிமன்றத்தில் நேற்று நடைபெறவிருந்த ஆட்கொணர்வு மனுமீதான வழக்கு விசாரணைகள் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுண்டுக்குழியைச் சேர்ந்த சலோசப்பு அல்போன்ஸ் வில்டன் குருநகரைச் சேர்ந்தவர்களான ஜ.ஆர்.கெனடி ராஜா, துரைசிங்கம் குணசேகரம் யாழ், தண்ணீர்த் தொட்டி வீதியைச் சேர்ந்த ஏ.ஆர்.கியூ.இராஜ்குமார், யாழ. பிரதானவீதியைச் சேர்ந்த தனானந்தன். ரவீந்திரன் ஆகியோரது ஆட்கொணர்வு வழக்குகளே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக போதிய ஆயத்தநிலையை அரசசட்டவாதி கொண்டிருக்காமையை அடுத்து, யாழ்மாவட்ட மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.வரதராஜா, வழக்கை செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

யாழ். மேல்நீதிமன்றில் 48 வரையான ஆட்கொணர்வு மனுக்கள் விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் காணாமல் போனோர்

# ஆட்கொணர்வு மனு விசாரணைகளில் பிரதி வாதிகள் ஆஜராகவில்லை!

(சாவகச்சேரி)

1996/97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்மராட்சியில் கைதாகி காணாமற்போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

தாக்கலான ஆட்கொணர்வு மனுக்களில் ஆறு மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வாதிகள் தரப்பில் சட்டத்தரணி விநாயகமூர்த்தியும், பிரதிவாதிகள் தரப்பில் அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமியும் ஆஜராகினர்.

எனினும் இந்த வழக்குகளில் பிரதிவாதிகளான படையினர் மன்றில் ஆஜராகாத காரணத்தினால் செப்ரெம்பர் 9 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

அடுத்த தவணைக்கு பிரதிவாதிகள் ஆஜராகாவிடினும் வழக்கு விசாரணைகள் நடைபெறும் என மாவட்ட நீதிவான் சுப்பிரமணியம் தெரிவித்தார்.


க.பொ.த உ/தரப் புதிய பாடத்திட்டத்திற்கான



கணக்கீட்டு நூல்

"நிதிக் கணக்கீட்டின் வினா வங்கி"

ஆசிரியர்: **D.Sam**

வெளியீடு: **DMI** யின் சக நிறுவனம் **DMP**

**நூல் பற்றிய குறிப்புக்கள்:**

- A/L -2006 இற்கான புதிய பாடத்திட்டத்தை முழுமையாக உள்ளடக்கியது. ( பழைய பாடத்திட்டத்திற்கும் பயன்படுத்தக்கூடியது)
- **A/L, AAT, BBA, B.Com, CIMA, CACA, HNDA, HNDM, IBSL, NDBS, NDBF, NCAT, NCAM** போன்ற பரீட்சைகளுக்கு உதவக்கூடியது.
- 750 பக்கங்கள்.
- 1192 வினாக்கள்.
- 1974-2004 க்குமான A/L பரீட்சை வினாப்பத்திரங்கள்.
- இந்தாண்டுவரை கிடைத்த **AAT, BBA, B.Com, CIMA, CACA, HNDA, HNDM, IBSL, NDBS, NDBF, NCAT, NCAM** பரீட்சை வினாப்பத்திரங்கள்.
- மேலதிகப் பயிற்சிகள் உள்ளடக்கிய **CD - Rom**

**DMP**

**கிடைக்கும் இடங்கள்**

**யாழ்:** **DMI,** பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஸ்ரீலங்கா புத்தகசாலை

**கொழும்பு:** பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
**Jeya Book Centre, PITRABAN**

(சி/2792)


## சிறுத்தைப் படையணி மாவீரர்களின்

# 9 ஆம் ஆண்டு நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

மணலாறு கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின்போது 1995 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த 57 சிறுத்தைப் படையணி மாவீரர்களின் 9ஆம் ஆண்டு நினைவு நாளும், சோதியா படையணியின் 7ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆறு மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச்சுடரை போராளி தமிழ்க்கவி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை தளபதி கேணல் ஜெயம் ஏற்றினார். ஈகைச்சுடரை பிள்ளையார் மாஸ்ரர் ஏற்றினார்.

1995ஆம் ஆண்டு ஏழாம் மாதம் 28ஆம் திகதி கொக்குத்தொடுவாய் படை படைமுகாம் மீதான தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த சிறுத்தைப்படையணியின் லெப்.கேணல் கோமளாவின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை அவரது தாயார் அணிவித்தார்.

சிறுத்தைப் படையணியின் முதல் மாவீரர் லெப்.ஆதிரையின் திருவுருவப்படத்திற்கு போராளி கெங்கா மலர் மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் சோதியா படையணியின் ஏழாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற போராளிகளுக்கான பரிசில்களை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதி லெப் கேணல் நகுலன், மற்றும் தினேஸ் மாஸ்ரர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் பெருமளவானோர் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

சமூகவிஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இலங்கை இனப்பிரச்சினையில் வெளிநாடுகளின் 'இராஜதந்திரத் தலையீடுகள்' என்ற தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை காலை 9.30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.வேல்ரஞ்சனின் அறிமுக உரையுடன் ஆரம்பமாகும் இந்தக் கலந்தரையாடலில் ரே.ரி.கணேசலிங்கம் கருத்துரை வழங்குவார்.

**அதிகமான நெகிழ்வு...**

மீண்டும் ஆரம்பிப்பதில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகின்றது. அரசாங்கத்தின் நம்பிக்கையை விடுதலைப்புலிகள் வென்றெடுக்க வேண்டும்.

தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக கொழும்பில் வைத்து வன்முறைகளில் ஈடுபடுதல், தற்கொலைக் குண்டுதாரிகளைக் கொழும்பில் தங்கவைத்தல், ஊடகவியலாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தல் ஆகியவற்றினூடாக விடுதலைப் புலிகள் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாது.

நம்பிக்கையை வளர்த்தெடுப்பது என்பது அன்னியோன்னியமான புரிந்துணர்வுடனேயே இந்த நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான பின்புலம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்தின் பொறுப்பையும், அர்ப்பணிப்பையும் நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

2002 ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கு தெரியாமல் கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பொறுப்புணர்வுடனும், அர்ப்பணிபபுடனும் செயற்படுவதோடு, அதற்கு இன்னும் அதிகமான நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

**சமாதான முயற்சிகளில்....**

தெரிவித்தார்.

இது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களின் ஆதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. ஜே.வி.பி இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன்னர் கடைப்பிடித்த கொள்கையையே தற்போதும் கடைப்பிடிக்கின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்தக் கொள்கையைக் கொண்டிருக்கின்றார். எனினும் டக்ளஸ் தேவானந்தா தமது கட்சியைச் சேர்ந்தவர் அல்ல என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் அமைச்சரின் கருத்து ஜனாதிபதியின் கருத்துக்கு எதிராக அமைந்துள்ளது.

சமாதானம் தொடர்பாக ஜனாதிபதி மேற்கொள்ளும் அனுகூலமான நகர்வுக்கு ஐக்கிய தேசியக்கட்சி தமது ஆதரவை வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

# தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது குறித்து கலந்துரையாடல்

தமிழ்மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று திருநெல்வேலியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் பகீரதன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், மாவட்ட மகளிர் அரசியற் பொறுப்பாளர் கயல்விழி மற்றும் மாணவர் அமைப்புக்களின் பிரதி நிதிகள், ஊடகவியலாளர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் அறிவை விருத்தி செய்யும்வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல், மாணவர்கள் மத்தியில் தேசிய உணர்வை வளர்த்தல், தீயசெயல்களுக்கு ஆளாகாது மாணவர்களைப் பாதுகாத்தல் முதலான நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் நே[illegible] இரவு 7 மணிமுதல் 9 மணி[illegible] இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ப-111)

# நீர் நிலைக்குள் தவறி வீழ்ந்து மூன்று வயதுக் குழந்தை மரணம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலுள்ள கண்ணகைபுரம் பகுதியில் மூன்று வயதுக் குழந்தையொன்று நீர் நிலைகுள் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில், கண்ணகைபுரத்தைச் சேர்ந்த குணசேகரம் விநோஜன் (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

இந்தச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

கண்ணகைபுரம் பகுதியிலுள்ள கிணறுகளில் நீர் வற்றிச் செல்வதனால் குளத்திலிருந்து வாய்க்கால் மூலம் வரும் நீரினை குழியொன்று வெட்டி அதற்குள் தந்தையார் தேக்கி வைத்திருந்தார்.

இவ்வாறு சேமிக்கப்படும் நீரினுள் விழுந்த மேற்படி குழந்தையே உயிரிழந்ததாகும்.

வீட்டிலிருந்த குழந்தையைக் காணாத பெற்றோர் சுமார் 10 நிமி[illegible]டம் வரையும் தேடியும் கிடைக்கா[illegible] காரணத்தினால் இறுதியில் நீர் தேக்[illegible] வைத்த குழியில் தேடியபோ[illegible] குழந்தையை இறந்தநிலையில் கண்டெடுத்தனர்.

**அமைச்சுப் பொறுப்பில்...**

ஆரம்பிக்கப்படும்போது ஜே.வி.பியிடம் இதுதொடர்பான அமைச்சு இருப்பது நிலமையை சிக்கலடையச் செய்யும் என்பதனாலேயே ஜனாதிபதி இந்த அவசர முடிவை எடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அரசியல் யாப்பின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் சட்ட பூர்வமாகவே இவை மாற்றப்பட்டுள்ளதாகவும், இதற்கான உத்தியோகபூர்வ உத்தரவைச் சட்டப்படி ஜனாதிபதி எழுத்தில் கொடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் விவசாய அமைச்சின் கீழ் இருந்த செயற்திட்டங்களை தங்களிடம் கலந்தாலோசிக்காது திடீரென ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பாவித்து வேறொரு அமைச்சின் கீழ் கொண்டுவந்திருப்பது மாபெரும் தவறு என்று ஜே.வி.பி அறிவித்துள்ளது.

இதற்கான தங்களது எதிர்ப்பை எழுத்தில் வழங்கியுள்ள ஜே.வி.பி.யின் தலைமை இது குறித்து ஜனாதிபதியுடன் அவசர உயர்மட்டச் சந்திப்பிற்கும் வாய்ப்புத் தருமாறு கோரியுள்ளது.

**கொட்டாவவில்...**

வெளியிட்டுள்ளனர்

இதேவேளை, இச்சம்பவம் நடைபெற்ற கொட்டாவ வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு வாகனம் தெஹிவளையைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமானதென தாம் கண்டு பிடித்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனம் கருணா குழுவினருக்கு ஒரு மாதக் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததாகவும் சில நம்பகமான தகவல்கள் தெரிவித்தன.

**புலிகளுடன்....**

கவிழ்க்கப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்த கருத்துக் குறித்து, ஜனாதிபதி அஞ்சத் தேவையில்லை.

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அமைப்பை அடிப்படையாக வைத்து, ஜனாதிபதி பேச்சுக்களை நடத்துவாராயின் அடுத்த நாளே கூட்டமைப்பு அரசாங்கம் முடிவுக்கு வரும் எனத் தெரிவித்துள்ளார்.

அதாவது, இடைக்கால நிர்வாக யோசனை, பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்படுமானால், அது அரசின் முடிவுக்கு வழிவகுக்கும் என பொருள்படுகிறது.

இது மிகப்பெரிய சவாலாகும். இதனால், நாம் பொறுப்புடன் ஜனாதிபதிக்குத் தெரிவிப்பது யாதெனில்- விமல்வீரவன்சவின் கருத்துக்களைப் பொருட்படுத்தாமல் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி தெளிவுடனும், நிபந்தனைகள் எதுவுமின்றியும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும்.

இந்த சமாதான நடவடிக்கைகளுக்கு எந்தவொரு அரசியல் பேதங்களும் அதிக பட்சமானதாக இருக்கமுடியாது. இந்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து, இந்த நாட்டில் யுத்தம் ஒன்று தோன்றுவதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

ஜே.வி.பியிலும் பார்க்க அதிகப்படியான வாக்குகள் எம்மிடம் உண்டு. நாடாளுமன்றத்திலும் இதேநிலை உண்டு என்பதை ஜனாதிபதிக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.